TNCD050010462021

அமர்வு நீதிபதி மகிளா நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

முன்னிலை- திரு. **G.** குலசேகரன், **B.A. B.L., L.L.M.,**
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம், கடலூர்.

**2026** ஆம் ஆண்டு, ஜூலை மாதம் **10** ஆம் நாள், புதன்கிழமை

அமர்வு வழக்கு எண். **218/2021**

**CNR.No.TNCD050010462021**

| | |
|---|---|
| Name of the Complainant | Inspector of Police<br>Chidambaram Town P.S.<br>**(Cr. No. 337 of 2019)** |
| Name of the Accused | Vinothkumar @ Vinoth, Age 32 / 2019<br>S/o. Ravichandiran<br>Kamatchiyamman Koil Sandhu,<br>Mandhakarai,<br>Chidambaram. |
| Charges | U/S. 498-A, 306 of IPC. |
| The period of remand of the accused | *06.11.2019 to 09.12.2019*<br>*(Accused Released on bail as per the order of the Honourable Principal District Judge Cuddalore, in Crl.M.P.No.7535 of 2019, dated: 04.12.2019)* |
| The date of filing of the complaint/final report in the Court | Complaint on 03.11.2019<br>Final report on 08.03.2021 |
| The date of committal of the case to the Court of Session | 08.11.2021<br>*(P.R.C.No.5 / 2021*<br>*Judicial Magistrate No.II Chidambaram)* |
| The date of questioning of the accused under Sec. 228 of Cr.P.C., as the case may be | 22.03.2022 |

| Filing of the miscellaneous petitions and their results including the results of challenge before Superior Courts, except routine petitions like petition under section 317 of Code | **Crl. M.P. No.** | **U/S.** | **Date of Result and Order** |
|---|---|---|---|
| | -- | | |

| Date of examination in Chief and Cross-examination of a witness | **No. and Name of Witness** | **Chief** | **Cross** | **Exhi -bits** |
|---|---|---|---|---|
| | Pw1/Murugadas | 10.10.23 | - | P1 |
| | Pw2/ Sathiyakumari | 30.05.25 | 30.05.25 | - |
| | Pw3/ Muralidharan | 30.05.25 | 30.05.25 | - |
| | Pw4/ Dr. Amitha | 25.09.25 | - | P2 series |
| | Pw5/ Vishu mahajan | 17.12.25 | 17.12.25 | P3 |
| | Pw6/ Balu | 22.01.26 | 22.01.26 | P4 |
| | Pw7/ Jawaharlal Deputy Superintendent of Police | 22.01.26 | 22.01.26 | P5 to 8 |
| | Pw8/ Murugesan Inspector of Police | 26.03.26 | 26.03.26 | P9, P10 |

| Date of examination of the accused under section 313 of the Code | 07.04.2026 |
|---|---|

| Details of abscondence of an accused and his appearance / production as the case may be | **Abscondence** | **Appearance** | **Production** |
|---|---|---|---|
| | Nil | – | -- |

| | |
|---|---|
| Plea of the accused | Pleaded not guilty |
| Finding of the Judge | Accused is acquitted from both the charges. |
| Sentence or Order | As found in the final order |
| Prosecution conducted by | **Tmt.D.Valarmathi,**<br>Special Public Prosecutor |

| | |
|---|---|
| Pleader for the accused | **Tvl. R. Bhagyaraj<br>S. Sivaguru<br>R. Arockia Praveenkumar** |

இவ்வழக்கு 05.06.2026 (*30.06.2026* அன்று எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது) அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்ததில் அரசுக்காக அரசு சிறப்பு வழக்கறிஞர். திருமதி.**D.**வளர்மதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் Legal Aid Defence Counsels திருவாளர்கள். **R.**பாக்யராஜ், **S.**சிவகுரு, **R.**ஆரோக்கியபிரவீன்குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

இந்த வழக்கு காவல் அறிக்கையின் பேரில் எழுந்த வழக்காகும்.

<u>அரசு தரப்பு வழக்கு இறுதி அறிக்கையில் குறிப்பிட்டபடி</u>:-

சிதம்பரம் நெ.18/1 காமாட்சி அம்மன்கோயில்தெருவில் வசித்து வரும் இவ்வழக்கு புகார்தாரரான முருகதாஸ் என்பவருக்கு இச்சம்பவத்தில் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோன அபிராமி மகள் ஆவார். முருகதாசின் சிறிய தங்கை சுமதியின் மகனான எதிரி வினோத்குமாரை அபிராமி சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் காதலித்து திருமணம் செய்துகொண்டதால் அபிராமியின் பெற்றோர் சீர்வரிசை ஏதும் செய்யாமலும் பேச்சு வார்த்தையின்றியும் இருந்து வந்த நிலையில், அபிராமியின் அத்தை மகளின் திருமணத்தின்போது மணப்பெண்ணிற்கு மோட்டார் சைக்கிள், சாமான்கள் பவுன் நகைகள் ஆகியவைகள் சீராக செய்யப்பட்டதை பார்த்த அபிராமி

தனது பெற்றோரிடம் "தனக்கு ஏன் சீர்வரிசை செய்யவில்லை" என்று கேட்டதற்கு முருகதாஸ் அடுத்த வருடம் சீர்வரிசை செய்வதாகக் கூறியதை அபிராமி தன் கணவரான எதிரி வினோத்குமாரிடம் சொன்னபோது எதிரி "நம்மை மதிக்காதவர்களிடம் சென்று ஏன் சீர் வரிசை பற்றி பேசினாய்" என்று கேட்டதால் அபிராமிக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட வாய்தகராறில் எதிரி அபிராமியை கையால் தாக்கி உடல் ரீதியாக துன்புறுத்தியதாலும் அபிராமியை "செத்துபோடி நான் வேறு திருமணம் செய்துகொள்கிறேன்" என கூறியதாலும் மனவுளைச்சலுக்கு ஆளான அபிராமி "இனி தான் வாழ்வதைவிட சாவதே மேல்" என முடிவு செய்து சிதம்பரம் காமாட்சியம்மன் கோவில் தெருவில் உள்ள எதிரி வினோத் என்பவரின் இட்லி கடையின் உள்ளே 03.11.2019-ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு கருப்புநிற துப்பட்டாவால் தகர ஷீட் போடப்பட்டிருந்த Angle-ல் தூக்கு போட்டுக்கொண்டதனால் அபிராமிக்கு ஏற்பட்ட மூச்சு திணறல் காரணமாக அபிராமி இறப்பதற்கு காரணமாகி எதிரி குற்றம் புரிந்துள்ளார். எனவே, எதிரி இதச பிரிவுகள் 498(A) மற்றும் 306-ன்கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்கள் புரிந்துள்ளார் என்று சிதம்பரம் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** இவ்வழக்கு சிதம்பரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் முதல் நிலை வழக்கு எண்.5/2021 ஆக 25.03.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பின்பு, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சான்றாவணங்களை பார்வையிட்டு, அரசு தரப்பில் எதிரி மீது

சாட்டப்பட்ட இதச பிரிவு 306-ன்கீழான குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச்சாட்டு என்பதால், இவ்வழக்கை மேல்விசாரணைக்காக கடலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளது. பின்பு, கடலூர், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற உத்தரவின்படி இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 13.12.2021 அன்று பெறப்பட்டுள்ளது.

**3**. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான சமயத்தில், அரசு தரப்பிற்கும், எதிரி தரப்பிற்கும் போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்ட பின்பு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள இறுதி அறிக்கை மற்றும் ஆவணங்களின்படி எதிரி குற்றம் புரிந்திருப்பார் என்று கருதவும், கருத்தில்கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரி மீது 22.03.2022 அன்று இதச பிரிவுகள் 498-A மற்றும் 306-ன்கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரியிடம் படித்துக்காட்டி விளக்கிக்கூறி வினவியபோது எதிரி குற்றங்களை மறுத்து குற்றவாளிஇல்லை எனவும், இவ்வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். எனவே, இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் குறியிடப்படவில்லை. இருதரப்பிலும் சான்றுப்பொருள் குறியிடப்படவில்லை.

**5.** <u>இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

**5-1)** அ.சா-**1** முருகதாஸ்/ இறந்த அபிராமியின் தந்தை/ இவருக்கு ஆஜர் எதிரியை தெரியும், எதிரி இவரின் தங்கையின் மகன். 2017 ஆண்டு இவர் மகள் அபிராமியை ஆஜர் எதிரி அழைத்து சென்று திருமணம் செய்துகொண்டார். திருமணம் முடிந்து அதே தெருவில் உள்ள அவரது அம்மா வீட்டில் வசித்து வந்தனர். திருமணம் முடிந்து ஒரு வருடம் கழித்து பெண் குழந்தை ஒன்று பிறந்தது. திருமணத்திற்கு இவர் சீர் எதுவும் செய்யவில்லை. குழந்தை பிறந்து இரண்டு மாதம் கழித்து இவருடைய தங்கை, அவருடைய கணவர் ரவிச்சந்திரன், ஆஜர் எதிரி நகை மற்றும் பொருட்கள் கேட்டனர். இவர்கள் செய்வதாக கூறினர். இவருக்கு மொத்தம் 4 தங்கைகள் உள்ளனர். இரண்டாவது தங்கையின் மகனுக்கு 2019ம் ஆண்டு திருமணம் நடந்தது. அந்த திருமணத்திற்கு ஆஜர் எதிரியும் இவரின் மகளும் சென்றனர். திருமணத்திற்கு சென்று திரும்பி வந்த இரண்டாவது நாளில் இவர் மகள் அபிராமி தூக்குபோட்டு இறந்துவிட்டார். வசதியில்லாததால் இவரால் சீர் செய்ய முடியவில்லை. எதிரி வீட்டில் என்ன செய்தார்கள் என்று இவருக்கு தெரியாது. எதனால் இவர் மகள் தூக்குபோட்டு இறந்தார் என்று இவருக்கு தெரியாது. இவர் மகளும் எதிரியும் திருமணம் செய்துகொண்ட சமயத்திலிருந்து அவர் இறந்தவரை இவர் அவருடன் பேசுவதில்லை. 03.11.2019 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு (சாட்சி மாற்றி) 1.00 மணிக்கு கடையில் கூலி வேலை பார்த்துவிட்டு இவர் திரும்பி வீட்டுக்கு வந்தார். வீட்டில் இவர் மனைவி இவர் மகள் தூக்குபோட்டு இறந்ததாகக் கூறினார். இவர் வீட்டிற்கு

சென்ற சமயத்தில் இவர் மகளின் பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டனர். இவர் மகள் இறப்பில் சந்தேகம் இருந்ததால் இவர்கள் சாலை மறியல் செய்தனர். சாலை மறியலை விட்டுவிட்டு இவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் சென்று ஒரு மனு கொடுத்துவிட்டு வந்துவிட்டனர். மறுநாள் சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சென்றனர். அதன் பிறகு இவரது மகளின் பிரேதத்தை அடக்கம் செய்துவிட்டனர். இவர் கலெக்டரிடம் கொடுத்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று இவருக்கு தெரியாது. இவரும் அதை பற்றி விசாரிக்கவில்லை. சிதம்பரம் டவுன் போலிசார் கொடுத்த சம்மன் பேரில் இவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். மாவட்ட ஆட்சியரை பார்த்த பிறகு 03.11.2019 ஆம் தேதி சிதம்பரம் டவுன் போலிசாரிடம் இவரும் இவரின் மனைவியும் இவர் மகள் தற்கொலை செய்துகொண்டதன் சம்மந்தமாக புகார் கொடுத்தனர். இவரிடம் காட்டப்படுவது இவர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார், அதில் உள்ள கையொப்பம் இவருடையது. அந்த புகார் அதசாஆ**-1**. அதன் பிறகு போலிசார் இவரை விசாரிக்கவில்லை.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**5-2)** அ**.**சா**-2** சத்தியகுமாரி/ இறந்த அபிராமியின் தாயார் / இவருக்கு ஆஜர் எதிரியை தெரியும். இவருக்கு ஒரு மகள் ஒரு மகன். அ.சா.1 இவரது கணவர். ஆஜர் எதிரி இவரது நாத்தனார் மகன் மற்றும் இவரது மகள் அபிராமியின் கணவர். ஆஜர் எதிரியின் வீடு இவர்கள் வீட்டில் இருந்து 10 வீடு தள்ளி இருக்கிறது. ஆஜர் எதிரி இவரது கணவரிடம் இவரது மகளை திருமணம் செய்து கொடுக்கும்படி கேட்டார். இவரது கணவர் எதிரியின் பெற்றோருடன் வந்து கேட்குமாறு சொல்லிவிட்டார். இவரது

மகள் அபிராமி பட்டப்படிப்பு முடித்த 10 நாட்களுக்குள் 2017-ம் ஆண்டு சிதம்பரத்தில் உள்ள ஒரு நகைகடைக்கு வேலைக்கு அனுப்பினார். இவரது மகள் வேலைக்கு சென்ற 10 நாட்களிலேயே எதிரி வினோத்குமார் இவரது மகளை கடத்திக்கொண்டு போய் திருமணம் செய்துகொண்டுவிட்டார். அன்று மாலை இவர்களுக்கு தெரிந்து இவரது மகளையும் மருமகனையும் கூப்பிட போனார். எதிரியின் வீட்டில் இவரது மகளை அனுப்ப முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இவரது மகள் அபிராமிக்கு திருமணமாகி ஒரு வருடம் கழித்த பின்னர் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்று சொன்னார்கள். அதன்பிறகு இவரது மகளுக்கு எதுவும் செய்யவில்லை என்று வினோத்தின் அம்மா, அப்பா வந்து இவரிடம் வம்பு வளர்த்தார்கள். அப்போது சண்டை மிகவும் பெரிதாக நடந்ததால் சிதம்பரம் நகர காவல்நிலையத்தில் எதிரியின் அம்மா, அப்பா, எதிரி மீது இவர் புகார் கொடுத்தார். இவரது மகள் அபிராமி இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் இவரது பெரிய நாத்தனார் மகனுக்கு நடந்த திருமணத்திற்கு போனார். அந்த திருமணத்தில் சீர் வரிசை அதிகமாக வந்ததால் நீயும் போய் உங்க அம்மா, அப்பாவிடம் வாங்கி கொண்டு வா என்று இவரது மகள் அபிராமியின் மாமனார், மாமியார் மற்றும் கணவர் சொன்னதாக இவரது மகள் அபிராமி இவரது வீட்டின் வாசற்படி அருகே வந்து இவரிடம் சொல்லிவிட்டு வீட்டிற்குள் வராமல் ரோட்டிலேயே நின்று விட்டு போய்விட்டார். அதற்கு பிறகு இரண்டு நாட்கள் கழித்து இவரது மகள் அபிராமி எதிரி வினோத்குமாரின் வீட்டில் தூக்குமாட்டிக்கொண்டு இறந்துவிட்டதாக ரோட்டில் சொல்லிக்கொண்டே அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பெரியாஸ்பித்திரிக்கு ஓடினார்கள். மறுநாள் சிதம்பரத்தில் உள்ள பெரியாஸ்பித்திரியில் போய் பார்த்தனர். இவரது மகள் இறந்த

அன்றே சிதம்பரம் காவல்நிலையத்தில் இவரது கணவர் புகார் கொடுத்தார். 2019-ம் ஆண்டில் இது நடந்தது. தேதி 03.11.2019. போலிசார் இவரை விசாரித்தார்கள்.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கீழ்கண்டவாறு கூறியுள்ளார்-

- இவரை போலிசார் 3-ம் தேதியும் மற்றும் 6-ம் தேதியும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.
- போலிசார் இவரை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னார் என்றால் சரிதான்.
- இவரை 4-ம் தேதி ஆர்டிஓ விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்.
- ஆர்டிஓ இவரை விசாரித்தபோது இவரது மகள் ஓடிச்சென்று இவர்களுக்கு தெரியாமல் எதிரியை திருமணம் செய்து கொண்டார் என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார்.
- இவருக்கு கோவம் வந்து இவரது மகள் கழுத்தில் இருந்த தாலியை இழுத்ததாக இவர் ஆர்டிஓ இவரை விசாரித்தபோது சொன்னாரா என்றால் சொல்லவில்லை. இவரது மகள் வீட்டிற்கு இவரது மகள் அபிராமிக்கு குழந்தை பிறந்த பிறகு இவரும் செல்லவில்லை இவரது மகள் அபிராமியும் இவரது வீட்டிற்கு வரவில்லை என சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.
- ஆர்டிஓ இவரை விசாரித்தபோது "அபிராமி இறப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்பு எனது மாமியார் அபிராமியை பார்த்து உனக்கு என்ன தலையெழுத்தா என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதார் என்றும் அதற்கு அபிராமி எனது வீட்டு வாசலில் எனது மாமியாரைப் பார்த்து உனது மகள்களுக்கு நீ என்ன செய்தாய் என்னை பற்றி ஏன் கூறுகிறாய்" என்று சொன்னதாக இவர் சொன்னாரா என்றால் தற்போது இவருக்கு ஞாபகம் இல்லை.
- ஆர்டிஓ இவரை விசாரித்தபோதும் போலிசார் இவரை விசாரித்தபோதும் "திருமணத்தில் சீர் வரிசை அதிகமாக வந்ததால் நீயும் போய் உங்க அம்மா, அப்பாவிடம் வாங்கி கொண்டு வா என்று எனது மகள் அபிராமியின் மாமனார், மாமியார் மற்றும் கணவர் சொன்னதாக எனது மகள் அபிராமி எனது வீட்டின் வாசற்படி அருகே வந்து என்னிடம் சொல்லிவிட்டு வீட்டிற்குள் வராமல் ரோட்டிலேயே நின்று விட்டு போய்விட்டார்" என்று சொல்லவில்லை என்று சொன்னால் தற்போது இவருக்கு ஞாபகம் இல்லை.
- இவருடைய வீடும் ஆஜர் எதிரியின் வீடும் இன்றும் ஒரே தெருவில் தான் உள்ளது என்றால் சரிதான்.
- இவரது மகள் அபிராமியின் மகளின் பெயர் இவருக்கு தெரியுமா என்றால் தெரியாது.
- இன்று வரை இவரது மகள் அபிராமியின் மகளை எதிரியின் குடும்பத்தார் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான்.
- இவரது மகளுக்கு எதிரியாலோ அல்லது எதிரியின் குடும்பத்தாலோ எவ்வித வரதட்சணை பிரச்சனையும் நடக்கவில்லை என்றும் இவருக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல.
- இவரது நாத்தனாரான எதிரியின் அம்மாவின் குடும்பத்திற்கும் இவர்கள் குடும்பத்திற்கும் உள்ள முன்விரோதம் காரணமாக இவரது மகள் வரதட்சணை கொடுமை காரணமாக இறந்துவிட்டார் என்று

பொய்யாக சொல்கிறார் என்றால் சரியல்ல.

- இவரது மகள் திருமணம் செய்துகொண்ட செலவு, Reception, வளைகாப்பு, பிரசவம் மற்றும் அனைத்து செலவுகளையும் எதிரியும் அவரது குடும்பத்தாரும் தான் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான்.
- எதிரியின் குடும்பத்திற்கு இவரிடம் வரதட்சணை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் இவர் பொய்சாட்சி சொல்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல.

**5-3)** அ.சா**-3** முரளிதரன்/ இறந்த அபிராமியின் மூத்த சகோதரர் / இவர் தற்போது சிதம்பரத்தில் வசித்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும். இவரது அப்பாவின் தங்கை மகன். வழக்கில் இறந்துபோன இவரது தங்கையின் கணவர். அ.சா.1 இவரது அப்பா, அ.சா.2 இவரது அம்மா. 31.08.2017 ஆம் தேதி காசுக்கடையில் தெருவில் உள்ள சண்முகா ஜூவல்லரியில் இவரது தங்கை அபிராமி வேலை செய்து கொண்டிருந்தார். மதியம் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வரவில்லை. இவரது அப்பா விசாரித்தபோது கடைக்கு வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். இவரது அப்பாவிடம் 10 நாட்களுக்கு முன்பு ஆஜர் எதிரி இவரது தங்கையை திருமணம் செய்து தர சொல்லி கேட்டார் என்றும் அதற்கு இவரது அப்பா பெற்றோரை கூட்டிவந்து நேரில் வந்து கேள் என்று சொல்லிவிட்டதாக தெரிந்துகொண்டார். அதன்பிறகு இவரது தங்கையை எதிரி தான் கூட்டிச்சென்று திருமணம் செய்து இருப்பார் என சந்தேகம் வந்தது. அதன்பிறகு எதிரி தான் இவரின் தங்கையை திருமணம் செய்துகொண்டார் என தெரிந்து இவர்கள் பார்க்க போனார்கள் பிரச்சனை ஆகிவிட்டது. மறுநாள் சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் இவரும் இவரது அப்பா, அம்மா மூன்று பேரும் புகார் கொடுத்தனர். அதன்பிறகு இவரது தங்கை வந்து காவல்நிலையத்தில் தான் இஷ்டப்பட்டு தான் திருமணம் செய்துகொண்டதாகவும் அப்பா, அம்மா வேண்டாம் என்று எழுதி கொடுத்துவிட்டார்கள். அதன்பிறகு இவர்கள் எதிரியின் வீட்டிற்கு போகவில்லை. இவரது

தங்கையையும் பார்க்கவில்லை. ஒரு வருடம் கழித்து இவரது தங்கைக்கு குழந்தை பிறந்ததாக தெரிந்துகொண்டார். 03.11.2019-ம் தேதி இவரது தங்கை இறந்துவிட்டதாக ஆட்டோவில் தூக்கி சென்றதாக தெருவில் இருப்பவர்கள் சொன்னார்கள். இவர் இவரது அப்பா, அம்மாவை கூட்டிக்கொண்டு காவல் நிலையம் செல்ல கிளம்பினார்கள். இவரது தங்கை தூக்குமாட்டிக்கொண்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். சீர் செய்யாததால் கொடுமைபடுத்தியதாக கேள்விப்பட்டார். இவரது தங்கை நேரடியாக எந்த விவரத்தையும் சொல்லவில்லை. அப்பா, அம்மாவிடம் இவரது தங்கை ரோட்டில் நின்று சொன்னதாக இவரது அப்பா, அம்மா இவரிடம் சொன்னார்கள். இவரது தங்கை இறப்பதற்கு முன்பு 01.11.2019-ம் தேதி இவரது அப்பாவின் மூத்த தங்கை மகனின் திருமணத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது பார்த்தார். ஆனால் பேசவில்லை. இவரது தங்கை இறந்ததற்காக இவரது அப்பா சிதம்பரம் நகர காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். வரதட்சணை கொடுமை காரணமாக இவரது தங்கை இறந்ததாக இவரது அப்பா புகார் கொடுத்தார். போலிசார் இவரை விசாரித்தார்கள்.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கீழ்கண்டவாறு கூறியுள்ளார்-

- போலிசார் விசாரணையிலும் ஆர்டிஓ விசாரணையிலும் இவரது தங்கை இவரது அப்பா, அம்மாவிடம் இவர்கள் வீட்டின் முன்பு ரோட்டில் நின்றுகொண்டு சொன்னதாக சீர் செய்யாததால் கொடுமைப்படுத்தியதாக இவரிடம் சொன்னார்கள் என்று இவர் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளார்.
- ஆர்டிஓ விசாரித்தபோது இவரது தங்கையை திருமணம் செய்து தர எதிரி இவரது அப்பாவிடம் கேட்டபோது இவரது அப்பா சம்மதிக்கவில்லை என்று சொல்லியுள்ளாரா என்றால் எதிரியின் பெற்றோர்களை கூட்டி வா என்று இவரது அப்பா சொன்னதாக சொல்லியுள்ளார்.
- ஆர்டிஓ இவரை விசாரிக்கும்போது இவரது அப்பா இவரது தங்கையை வரதட்சணை கேட்டு எதிரி துன்புறுத்தியதாக புகார் கொடுத்துள்ளார் என்று சொல்லவே இல்லை என்றால் சரியல்ல.

- இவரது தங்கை அபிராமியின் மகள் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அனன்யா என்று கேள்விப்பட்டார்.
- இவரது தங்கையின் திருமணம், Reception, வளைகாப்பு மற்றும் குழந்தை பிறந்ததற்கான செலவை எதிரி தான் பார்த்தார் என்றால் சரிதான். எதிரிதான் இவரது தங்கையை அழைத்து சென்று திருமணம் செய்துகொண்டார் என்பதால் அவர் தான் பார்க்க வேண்டும்.
- இவரது தங்கையின் மகள் அனன்யாவுக்கான செலவுகளையும் எதிரி குடும்பம் தான் செய்கிறது என்றால் சரிதான்.
- எதிரியோ எதிரியின் குடும்பத்தாரோ இவரது தங்கையிடம் சீர் கேட்கவில்லை என்றும் அதற்கான அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.
- இவர் பெற்றோருக்கு அனுசரணையாக சாட்சி அளிக்கிறார் என்றால் சரியல்ல.

**5-4)** அ.சா**-4** டாக்டர் அமிதா / இவர் தற்போது சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறார். இவர் 04.11.2019 அன்று சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் 20 வயது மதிக்கத்தக்க அபிராமி என்ற பெண்ணின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக 04.11.2019 அன்று பிற்பகல் 02.45 மணியளவில் சிதம்பரம் துணை ஆட்சியர் அவர்களின் கடிதத்துடன் குற்ற எண். 337/2019 சட்டப்பிரிவு 174(3) Cr.P.C என்ற வழக்கிற்காக சிதம்பரம் நகர காவல் நிலைய முதல்நிலைக் காவலர் 1834 திருமதி.பிரபா என்பவர் ஆஜர்படுத்தினார். பிரேதத்தின் அங்கு அடையாளங்கள்- 1) இடது தோள்பட்டையில் ஒரு கருப்பு மச்சம் 2) வலது தொடையில் ஒரு கருப்பு மச்சம். 04.11.2019 அன்று பிற்பகல் 02.45 மணியளவில் பிரேதம் பார்வையிடப்பட்டது. அப்போது அவரின் இரண்டு கைகள் மற்றும் இரண்டு கால்களிலும் மரண விரைப்பு காணப்பட்டது. பிரேதபரிசோதனை 04.11.2019 அன்று பிற்பகல் 03.00 மணிஅளவில் ஆரம்பிக்கப்பட்டது. சுமாரான உடல்வாகு கொண்ட பெண் பிரேதம் பிரேத பரிசோதனை மேஜையின் மீது கைகள் இருபுறமும் திறந்த நிலையில் இருந்தது. கண்கள் மூடிய நிலையில் இருந்தது.

காது மற்றும் மூக்கு பகுதியில் இருந்து எந்த திரவமும் கசிந்த படி இல்லை. நாக்கு உட்புறமாக இருந்தது. பற்களில் சாதாரணமாக இருந்தது. வாய் மூடப்பட்டு இருந்தது.

வெளிப்புற காயங்களாக-

1) கழுத்தின் முன் பகுதியில் 26 x 2 செ.மீ அளவுள்ள பிணைப்பு காயம் காணப்பட்டது.

உட்புற காயங்களாக-

1) மார்பு மற்றும் விலா பகுதியில் காயம் எதுவும் காணப்படவில்லை.
2) இதய அறைகள் ரத்தத்தால் நிரம்பி இருந்தன.
3) நுரையீரல் கன்றிய நிலையில் காணப்பட்டது.
4) கழுத்து எலும்பு ரசாயன பகுப்பாய்விற்காக சேகரிக்கப்பட்டது.
5) வயிற்று பகுதியின் இரைப்பையில் சுமார் 150 கிராம் அளவுள்ள ஜீரணம் ஆகாத உணவுப் பொருட்கள் காணப்பட்டது.
6) கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் கன்றிய நிலையில் இருந்தது.
7) குடல் காற்றால் நிரப்பபட்டு இருந்தது.
8) சிறுநீரகப்பை காலியாக இருந்தது.
9) கர்ப்பை சாதாரண நிலையில் இருந்தது.
10) இடுப்பு எலும்பு சரியான நிலையில் இருந்தது.
11) மண்டை ஓட்டில் மற்றும் அதனை சுற்றியுள்ள ஜவ்வு பகுதி சாதாரண நிலையில் இருந்தது.
12) மூளை கன்றிய நிலையில் காணப்பட்டது.

பிரேத பரிசோதனை 04.00 மணியளவில் முடிவுற்றது. உடல் உறுப்புகள் கல்லீரல், சிறுநீரகம், இரைப்பை மற்றும் அதன் உள்ளடக்கங்கள், கழுத்து எலும்பு, குடல், இணைப்பு காயத்தின் தோல் பகுதி ஆகியவை பரிசோதனைக்காக தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. இறப்பு பிரேத பரிசோதனைக்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக நிகழ்ந்து இருக்கலாம் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். 26.06.2020 ஆம் தேதி ரசாயன ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் உடல் உறுப்புகளில் மது மற்றும் நச்சு பொருட்கள் காணப்படவில்லை என்று

சான்றளிக்கப்பட்டு இருந்தது. கழுத்து எலும்பில் முறிவு எதுவும் இல்லை என்று சான்றளிக்கப்பட்டு இருந்தது. தோல் மற்றும் அதனை சுற்றியுள்ள அமைப்புகள் கன்றிய நிலையில் காணப்பட்டது என்று ஆய்வறிக்கை பெறப்பட்டது. இவர் பார்வையிட்ட ஆய்வறிக்கைகள் மற்றும் இவரால் வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை இவரிடம் காட்டப்படுவதுதான். (அந்த 3 தாள்கள் அடங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் Autopsy Report, Hyoid Bone Report ஆகியவை அ**.**த**.**சா**.**ஆ**.2** வரிசை ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). இறுதியாக இந்த பெண்ணின் மரணம் தூக்கில் தொங்கியதால் ஏற்பட்ட மூச்சுத் திணறலின் காரணமாக நிகழ்ந்திருக்க கூடும் என்று சான்று அளித்துள்ளார். போலிசார் இவரை விசாரித்தார்கள்.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**5-5)** அ**.**சா**-5** விஷூ மகாஜன்/ சிதம்பரம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் ஆட்சியர் / இவர் தற்போது இணை மேலாண்மை இயக்குநராக தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். இவர் 2019ம் ஆண்டு சிதம்பரம், உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் ஆட்சியராக பணியில் இருந்தபோது 04.11.2019 ஆம் தேதி சிதம்பரம் நகர காவல்நிலைய குற்ற எண்.337/2019 என்ற வழக்கு சம்மந்தப்பட்ட அபிராமி என்பவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்ய வேண்டி சிதம்பரம் நகர காவல் ஆய்வாளர் அவர்கள் அளித்த வேண்டுகோள் கடிதத்தினை பெற்று சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சென்றார். அபிராமி என்பவரின் பிரேதத்தை அவருடைய அம்மா அடையாளம் காட்ட இவர் இவரது பிரேத விசாரணையை ஆரம்பித்தார். அபிராமி என்பவர் பிரேதத்தில் neck-ல் 26 x 2 c.m என்ற அளவுள்ள Rope

உடைய hanging mark இருந்தது. வேறு எந்த injury-ம் இவர் அபிராமியின் Body-ல் பார்க்கவில்லை. Inquest முடிச்சிட்டு இவர் அபிராமியின் Body-ஐ Police constable Mrs.Piravar அவரிடம் Post Mortem-ற்காக Body-ஐ ஒப்படைத்துவிட்டார். அதுக்கு அப்புறம் இவர் விசாரணைக்காக அபிராமியின் அம்மா, அப்பா, அண்ணன், கணவர், மாமனார், மாமியார், பஞ்சாயத்தார் ஆகியோர்களை விசாரித்தார். விசாரணையில் இவருக்கு தெரிய வந்தது என்னவென்றால் "விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் எனது பிரேத பார்வையின் அடிப்படையிலும் அபிராமியின் இறப்பில் வரதட்சணை கொடுமை நிகழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த Report-ஐ இவர் சிதம்பரம் DSP-க்கு Submit செய்தார். இவர் இறந்துபோன அபிராமியின் பெற்றோர்களான சத்தியகுமாரி மற்றும் முருகதாஸ் ஆகியோரை விசாரணை செய்ததில் அவர்கள் இவரது மகளின் இறப்பிற்கான காரணம் அபிராமியின் மாமனார், மாமியார் நகை கேட்டதால் இவரது மகள் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளார்கள். இவரிடம் காணொலி காட்சியின் மூலம் காட்டப்பட்ட 11.11.2019 தேதியிட்ட Report தான் இவர் சிதம்பரம் DSP-க்கு அனுப்பியது. (அந்த 9 பக்கங்கள் கொண்ட 5 தாள்கள் கொண்ட Report அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 8 தாள்கள் கொண்ட சாட்சியங்களின் வாக்குமூலங்கள் அடங்கிய Report 13 தாள்கள் கொண்ட ஆவணம் அ**.**த**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). சாட்சிகளை விசாரித்ததில் இவருடைய Subjective Assessment finding-ன்படி இவர் வரதட்சணை கொடுமை காரணம் அல்ல என்று இவருடைய முடிவை குறிப்பிட்டுள்ளார். DSP இவரை விசாரிக்கவில்லை.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கீழ்கண்டவாறு

கூறியுள்ளார்-

- இவருடைய விசாரணையில் இறந்துபோன அபிராமியின் அப்பா முருகதாஸ் " எனது பெரிய தங்கையின் பையனுக்கு சென்ற வாரம் திருமணம் நடைபெற்றது. அதற்கு நாங்கள் செல்லவில்லை. வினோத்குமார் மற்றும் அபிராமி சென்றுள்ளார்கள். அப்போது அங்கு வந்த சீர் வரிசைகளை பார்த்து எனது மகளை சீர்வரிசை கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்" என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

- இவருடைய சாட்சியத்தில் முருகதாஸ் என்பவர் அவரது பெரிய தங்கையின் பையனுக்கு திருமணம் நடைபெற்றது குறித்து சொன்ன தகவலை இவரது விசாரணையின்போது அபிராமியின் அம்மா சத்தியகுமாரி சொல்லவில்லை என்றால் சரிதான்.

- இவருடைய விசாரணையில் அபிராமியின் அம்மா சத்தியகுமாரி " அபிராமி இறப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்பு எனது மாமியார் ரேஷன்கடையில் அபிராமியை பார்த்து உனக்கு என்ன தலையெழுத்தா என்று தலையில் அடித்துக்கொண்டு அழுதார் அதற்கு அபிராமி எனது வீட்டு வாசலில் எனது மாமியாரை பார்த்து உனது மகள்களுக்கு நீ என்ன செய்தாய் என்னை பற்றி ஏன் கூறுகிறாய் என்று கூறினார் " என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

- இவருடைய அறிக்கையில் " ஒரு வாரத்திற்கு முன்பு அபிராமியும், வினோத்குமாரும் ஒரு திருமணத்திற்கு சென்று வந்துள்ளனர். மேற்படி திருமணத்தில் செய்யப்பட்ட சீர்வரிசை பொருட்களை பார்த்து தனக்கும் தனது தாய் வீட்டிலிருந்து இவ்வாறு செய்யவில்லையே என்ற மன உளைச்சலில் அபிராமி இருந்துள்ளார் என தெரிய வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

**5-6)** அ.சா-**6** பாலு / இவர் தற்போது சிதம்பரத்தில் வசித்து வருகிறார். இவர் பர்னிச்சர் கடை நடத்தி வருகிறார். ஆஜர் எதிரியை இவருக்கு தெரியும். இவர் தெருவைச் சார்ந்தவர். ஆஜர் எதிரியின் மனைவி தூக்குமாட்டிக்கொண்டு இறந்துவிட்டது சம்மந்தமாக இவரை சிதம்பரம் நகர காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள். அங்கு காவல்நிலையத்தில் வைத்து இவரிடம் கையெழுத்து வாங்கினார்கள். இவரிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் இவருடையதுதான். (அந்த பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). எதற்காக போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்ற விவரம் இவருக்கு தெரியாது. போலிசார்

இவரை விசாரித்தார்கள்.

இவர் அரசு தரப்புக்கு எதிராக சாட்சியமளித்துள்ளதால் இவரை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பு வழக்கு முழுவதும் எடுத்துரைக்கப்பட்டு இவரிடம் சிறப்பு அரசு வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபோது அதை மறுத்துள்ளார்.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கீழ்கண்டவாறு கூறியுள்ளார்-

- பார்வை மசரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் இவருக்கு தெரியாது.

**5-7)** அ**.**சா**-7** ஜவகர்லால்/ காவல் துணை கண்காணிப்பாளர்/ இவர் தமிழ்நாடு காவல் துறையில் கூடுதல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது கடலூரில் வசித்து வருகிறார். கடந்த 03.11.2019 ஆம் தேதி இவர் சிதம்பரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பொறுப்பில் இருந்தபோது சிதம்பரம் நகர காவல் உதவி ஆய்வாளர் திரு.G.பாஸ்கர் என்பவர் பணியில் இருந்தபோது முருகதாஸ், த/பெ.கோபால் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற 337/2019 சட்டப்பிரிவு 174(3) கு.வி.மு.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (அந்த முதல் தகவல் அறிக்கை அ**.**த**.**சா**.**ஆ**.5** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவையும் சிதம்பரம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். இதர சம்மந்தப்பட்ட நகல்களை இவரின் பார்வைக்கு வைத்ததை இவர் இவரது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சம்பவம் இடமான சிதம்பரம் காமாட்சி அம்மன் கோவில் தெரு சந்து வினோத்குமார் இட்லி கடை சென்று பார்வையிட்டு விசாரணை

செய்து சாட்சிகள் பாலு, சந்தோஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.**6** ஆகவும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.**7** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது). பின்னர் பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். அன்றைய தினமே சாட்சிகள் முருகதாஸ், சத்தியகுமாரி, முரளிதரன், தேவேந்திரன், மாசிலாமணி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். சாட்சிகளை விசாரணை செய்ததில் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 174(3) கு.வி.மு.ச-வில் இருந்து 306 இ.த.ச ஆக பிரிவு மாறுதல் செய்து அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். (அந்த 03.11.2019 ஆம் தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). அந்த இ.த.ச பிரிவு 306ன் கீழான வழக்கினை தொடர் புலன் விசாரணைக்காக சிதம்பரம் நகர காவல் நிலைய ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தார். அ.சா.6 பாலு என்பவர் சொன்ன விவரத்தைத்தான் வாக்குமூலமாக பதிவு செய்தார்.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கீழ்கண்டவாறு கூறியுள்ளார்-

- அ.சா.1 இவர் விசாரித்தபோதும் புகாரிலும் மூத்த தங்கை செல்வியின் மகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.
- இவர் விசாரித்த சாட்சிகள் சத்தியகுமாரி, முரளிதரன் ஆகியோரும் செல்வியின் மகளுக்கு திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் கடந்த வெள்ளிக்கிழமை செல்வியின் மகளுக்கு திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார்கள்.
- செல்வியையோ மணமக்களையோ திருமணம் எங்கு நடந்தது என்பது பற்றியோ இவர் விசாரித்தாரா என்றால் இந்த வழக்கிற்கு தேவை இல்லை என்பதால் விசாரிக்கவில்லை.
- அ.சா.1 இவரது விசாரணையில் "நான் வீட்டிற்கு சென்ற சமயத்தில் என் மகளின் பிரேதத்தை

மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டனர். என் மகள் இறப்பில் சந்தேகம் இருந்ததால் நாங்கள் சாலை மறியல் செய்தோம். சாலைமறியலை விட்டுவிட்டு நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் சென்று ஒரு மனு கொடுத்தோம். மனு கொடுத்துவிட்டு நாங்கள் வந்துவிட்டோம். மறுநாள் சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன்பிறகு எனது மகளின் பிரேத்தை அடக்கம் செய்துவிட்டோம். நான் கலெக்டரிடம் கொடுத்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நானும் அதை பற்றி விசாரிக்கவில்லை.” என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

- திருமணத்தின்போது சண்டை வந்ததாகவும் அதுசம்மந்தமாக ஆஜர் எதிரி மீதோ அல்லது அவர்கள் பெற்றோர்கள் மீதோ இவர் விசாரணை செய்த வரையில் புகார் ஏதேனும் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை.
- சரிவர விசாரணை செய்யாமல் தவறான சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல.
- இவர் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல.

**5-8)** அ.சா**-8** முருகேசன்/ காவல் ஆய்வாளர் / இவர் 2019 ஆம் ஆண்டில் சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 03.11.2019 ஆம் தேதி சிதம்பர நகர காவல் நிலைய குற்ற எண்.337/2019, சட்டப்பிரிவு 174(3)-குவிமுச படி முதல் தகவல் அறிக்கை திரு.பாஸ்கர் உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்து வைத்ததை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜவகர்லால் அவர்கள் முதல் கட்ட விசாரணையை முடித்து அப்போது சிதம்பர நகர காவல் ஆய்வாளராக பணியில் இருந்த இவருக்கு மேல்நடவடிக்கைக்காக வழக்கு கோப்புகளை அனுப்பி வைத்தார். இவ்வழக்கினை இவர் புலன் விசாரணை எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் ஆகியவற்றில் உள்ள விவரங்கள்படி இருந்ததால் இவர் தனியாக ஆவணங்களை தயார் செய்யவில்லை. அன்றே சாட்சிகள் முருகதாஸ், சத்தியகுமாரி, முரளிதரன், தேவேந்திரன், மாசிலாமணி, பாலு,

சந்தோஷ்குமார் இவர்களை தனிதனியே விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து மேற்படி சம்பவம் உண்மை என்று தெரிய வருவதால் புகார்தாரர் கொடுத்த தகவலின் பேரில் இவ்வழக்கின் எதிரி வினோத்குமார் என்பவரை 06.11.2019 அன்று மதியம் 14.00 மணிக்கு சிதம்பரம் ஓமக்குளம் பெட்ரோல் பங்க் அருகில் கைது செய்து கைது செய்த காரணத்தை தெரிவித்தும் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கணேசன், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து கையெழுத்து பெற்றார். மேலும் எதிரியுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்தும் தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உத்தரவு கேட்டு அனுப்பி வைத்தார். 28.06.2020 ஆம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன பிரேதமான அபிராமி என்பவரின் பிரேதத்தை கூராய்வு செய்த டாக்டர் அமீதா சிதம்பரம் அரசு மருத்துவமணை என்பவரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் பிரேத பரிசோதனைக்கு அலுவலாக சென்ற பெண் முதல் நிலைக்காவலர் 1834 பிரபா என்பவரை விசாரித்தும் மற்றும் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.பாஸ்கர் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் புலன் விசாரணையை முடித்து குற்ற தொடர்வு துறை இணை இயக்குநர் அவர்களின் கருத்துரை பெற்றும் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 306 இதச பிரிவிலிருந்து 498(A), 306 இதச பிரிவுகளாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். (அந்த 28.06.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.**9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இந்த வழக்கில்

சிதம்பரம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் இறந்த நபரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அதை இவர் பார்வையிட்டார். (அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). வழக்கின் அனைத்து புலன் விசாரணையையும் முடித்து குற்ற தொடர்வு துறை துணைஇயக்குநர் அவர்களிடம் கருத்துரை பெற்று இவ்வழக்கின் எதிரி வினோத் என்கிற வினோத்குமார் என்பவர் மீது இதச பிரிவுகள் 498(A), 306-ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

இவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கீழ்கண்டவாறு கூறியுள்ளார்-

- அ.சா.1/முருகதாஸ் என்பவர் இவர் விசாரித்தபோது என் மகள் இறப்பில் சந்தேகம் இருந்ததால் நாங்கள் சாலை மறியல் செய்தோம் சாலை மறியலை விட்டுவிட்டு நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் சென்று ஒரு மனு கொடுத்துவிட்டு நாங்கள் வந்துவிட்டோம் மாவட்ட ஆட்சியரை பார்த்த பிறகு 03.11.2019 தேதியில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.
- அ.சா.1/முருகதாஸ், அ.சா.2/சத்தியகுமாரி, அ.சா.3/முரளிதரன் ஆகியோர்கள் இவருடைய விசாரணையில் அபிராமியை கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்பு வினோத்குமார் அழைத்து சென்று திருவந்திபுரம் கோவிலில் திருமணம் செய்து கொண்டார் மேற்படி திருமணம் எங்களுக்கு தெரியாமல் நடந்ததால் நாங்கள் அவர்களது திருமணத்தை ஏற்காமல் பேச்சுவார்த்தையின்றி இருந்தோம் என்று சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள்.
- அ.சா.1/முருகதாஸ், அ.சா.2/சத்தியகுமாரி, அ.சா.3/முரளிதரன் ஆகியோர்கள் இவருடைய விசாரணையில் அபிராமிக்கு ஒன்றரை வயதில் அனன்யா என்ற பெண் குழந்தை உள்ளது. அபிராமியும் வினோத்குமாரும் நல்லமுறையில் குடும்பம் நடத்தி வந்தார்கள். என் மகள் காதல் திருமணம் செய்துகொண்டதால் அவருக்கு சீராக செய்யவேண்டியைதையும் நாங்கள் செய்யவில்லை. இதனால் இரு குடும்பத்தினரிடையே பேச்சு வார்த்தை எதுவும் இல்லாமல் இருந்தது என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார்கள்.
- இவர் விசாரித்த அனைத்து சாட்சிகளும் உறவினர் மகளுக்குதான் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள்.
- இவருடைய விசாரணையில் அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அவர்களை முதலில் சிதம்பரம் DSP விசாரித்தபோது என் மருமகன் வரதட்சணை கேட்டு துன்புறுத்தினார்கள் என்று சொன்னால் வினோத்குமார் மீதும் அவரது குடும்பத்தினர் மீது போலிசார் தீவிர நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பதினால் அபிராமி

அவரது கணவர் குடும்பத்தினர் வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக தவறுதலாக சொல்லிவிட்டோம் ஆனால் அம்மாதிரி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று என்னிடம் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

- திருமணம் நடைபெற்றதாக சொல்லப்படும் அபிராமியின் உறவினரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் இல்லை.
- அ.சா.2/சத்தியகுமாரி வினோத்குமார் மீதும் அவரது குடும்பத்தினர் மீது வேறு ஏதேனும் புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.
- எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும் அவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.
- ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.
- அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்திலேயே தயார் செய்யப்பட்டது என்றும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் ஆஜர் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**6.** இவ்வழக்கில் அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள்-4, 5, 7 முதல் 9 எதிரி தரப்பால் வசமாக்கப்பட்டுள்ளதால் அவர்களை விசாரிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டும், அரசு தரப்பு சாட்சிகள் பட்டியலில் உள்ள சாட்சி-11 விசாரிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டும், பட்டியல் சாட்சி-12 படுத்த படுக்கையாக இருப்பதால் விசாரிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டும், அரசு தரப்பு சிறப்பு அரசு வழக்கறிஞரால் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**7.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ளவைகள் குறித்து 07.04.2026 அன்று எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)-ன்படி விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி அவற்றை மறுத்து பொய் சாட்சி என்றும், தன் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பு முடிக்கப்பட்டது.

**8.** அரசு தரப்பு வாதுரை-

அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு சிறப்பு அரசு வழக்கறிஞர் தன் வாதுரையில் எதிரி தன்னுடைய மகளிடம் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக தன்னுடைய மகள் தன்னுடைய வீட்டிற்கு வந்து தெரிவித்தார் என்று அ.சா-2 அளித்துள்ள சாட்சியம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அ.சா-1 இறந்துபோன அபிராமியின் தகப்பனார் தனது மகளின் இறப்பில் சந்தேகம் இருந்ததால் சாலை மறியல் செய்து மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து அதன்பின்னர் 03.11.2019ம் தேதி சிதம்பரம் டவுன் போலிசாரிடம் புகார் கொடுத்தது குறித்து அளித்துள்ள சாட்சியம் மற்றும் இவ்வழக்கில் பிரேத விசாரணை செய்து அறிக்கை வழங்கிய அ.சா-5 சிதம்பரம் உட்கோட்ட நிர்வாக நடுவர் அளித்துள்ள சாட்சியத்தின் அடிப்படையிலும், அ.சா-7, 8 ஆகியோர் புலன்விசாரணை அலுவலர்கள் அளித்துள்ள சாட்சியத்தின் அடிப்படையிலும் எதிரி மீது இதச பிரிவுகள் 498ஏ, 306-ன்கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரிக்கு இதச பிரிவுகள் 306, 498ஏ-ன்கீழான குற்றங்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**9.** எதிரி தரப்பு வாதுரை-

எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைக்கு ஆதரவாக கீழ்கண்ட விவரங்களை குறிப்பிட்டார்-

- இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையிலேயே அபிராமியின் அத்தை மகளின் திருமணத்தின்போது

மணப்பெண்ணுக்கு சீர் செய்ததை பார்த்த அபிராமி தனது பெற்றோரிடம் தனக்கு ஏன் சீர்வரிசை செய்யவில்லை என கேட்டார் என்றும், அதற்கு அவருடைய தகப்பனார் முருகதாஸ் அடுத்த வருடம் சீர்வரிசை செய்வதாக கூறியதை தன் கணவரான எதிரி வினோத்குமாரிடம் சொன்னபோது எதிரி "நம்மை மதிக்காதவர்களிடம் சென்று ஏன் சீர்வரிசை பற்றி பேசினாய்" என்று கேட்டதால் அபிராமிக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட வாய்த்தகராறில் எதிரி அபிராமியை கையால் தாக்கி செத்துப் போடி என்று கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் அ.சா-1 முருகதாஸ் தன்னுடைய சாட்சியத்தில் எதனால் தன் மகள் தூக்குப்போட்டு இறந்தார் என்று தனக்கு தெரியாது என்றும், தன் மகளும், எதிரியும் திருமணம் செய்துகொண்ட சமயத்திலிருந்து அவர் இறந்தவரை அவருடன் பேசுவதில்லை என்றும் சாட்சியளித்துள்ளது அரசு தரப்பு குற்றச்சாட்டிற்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் அமைந்திருப்பது இந்த குற்றச்சாட்டு பொய்யானது என்பதை காட்டுவதாக உள்ளது என்று வாதுரைத்தார்.

- மேலும் அத்தை மகள் திருமணம் என்று இறுதிஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக அ.சா-1 அபிராமியின் தகப்பனார், தனது இரண்டாவது தங்கையின் மகனுக்கு திருமணம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.
- அ.சா-2 அபிராமியின் அம்மா சிதம்பரம் நகர காவல்நிலையத்தில் எதிரியின் அம்மா, அப்பா மற்றும் எதிரியின் மீது தான் புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் இந்த வழக்கு விசாரணையில் எந்த இடத்திலும்

அவ்வாறான ஒரு புகார் கொடுத்தது பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.

- அ.சா-2ம் தன்னுடைய பெரிய நாத்தனார் மகனுக்கு நடந்த திருமணம் என்று குறிப்பிட்டுள்ளார்.
- அ.சா-3 அபிராமியின் சகோதரர் கேள்விப்பட்டதாக சாட்சியளித்துள்ளார். தன்னுடைய சகோதரி அபிராமி தன்னிடம் நேரடியாக எந்த விவரத்தையும் சொல்லவில்லை என்று குறிப்பாக சாட்சியளித்துள்ளார்.
- அ.சா-4 டாக்டர் அமிதா, அபிராமியின் இறப்பு தூக்குப்போட்டுக்கொண்டதில் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக ஏற்பட்டுள்ளது என கருத்துரை வழங்கியுள்ளார்.
- அ.சா-5 வருவாய் கோட்டாட்சியர் அளித்துள்ள அறிக்கையில் வரதட்சணை கொடுமை காரணம் இல்லை என குறிப்பாக குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தன்னுடைய பெரிய தங்கையின் மகனுக்கு திருமணம் நடந்ததாக சாட்சிகள் தன்னிடம் கூறியதாக சாட்சியளித்துள்ளார்.
- அ.சா-6 பார்வைமகசர் சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியளிக்கவில்லை.
- அ.சா-7 உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தன்னிடம் அ.சா-1 சாலை மறியல் செய்து மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து அந்த மனு பற்றி எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியாது என்று தன்னுடைய விசாரணையில் தெரிவிக்கவில்லை என ஏற்றுக்கொண்டுள்ளார்.
- திருமணத்தின்போது சண்டை வந்து அதுசம்மந்தமாக எதிரி மீதோ அல்லது

அவரது பெற்றோர் மீதோ புகார் எதுவும் தான் விசாரணை செய்தவகையில் உள்ளதா என்பது குறித்து தனக்கு ஞாபகமில்லை என்று சாட்சியளித்துள்ளார்.

- அ.சா-8 காவல் ஆய்வாளர் முருகேசனும் தன்னுடைய மகள் இறப்பில் சந்தேகம் இருந்ததால் சாலை மறியல் செய்து மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தது பற்றி அ.சா-1 தன்னுடைய விசாரணையில் தெரிவிக்கவில்லை என ஏற்றுக்கொண்டுள்ளார்.
- அ.சா-1 முதல் 3 ஆகியோர் அபிராமியை வினோத்குமார் அழைத்துச் சென்று திருவந்திபுரம் கோவிலில் தங்களுக்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்டதால் அவரது திருமணத்தை ஏற்காமல் பேச்சுவார்த்தையின்றி இருந்தோம் என்று தன்னுடைய விசாரணையில் தெரிவித்துள்ளார்கள் என்று ஏற்றுக்கொண்டுள்ளார்.
- அ.சா-1 முதல் 3 இவருடைய விசாரணையில், "ஏற்கனவே சிதம்பரம் டி.எஸ்.பி. விசாரித்தபோது தன் மருமகன் வரதட்சணை கேட்டு துன்புறுத்தினார் என்று சொன்னால் அவர் மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் போலிசார் தீவிர நடவடிக்கை எடுப்பார்கள் என்பதினால் தன் மகள் அபிராமியை அவரது கணவர் குடும்பத்தினர் வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக தவறுதலாக சொல்லிவிட்டதாக" சொல்லியுள்ளார்கள் என்பதை இவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபிக்கப்படாததால் இதச பிரிவுகள் 498A, 306 ஆகிய பிரிவுகளின் கீழ் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்மந்தமான

சாட்சியங்களில் மிகுந்துள்ள சந்தேகங்களின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

**10.** ஒரு குடும்பத் தகராறின்போது திடீரென ஏற்படும் கோபத்தின் காரணமாக ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் சூடான வார்த்தை பிரயோகங்கள் ஒருவரை தற்கொலைக்கு தூண்டுவதாக அமையாது என சமீபத்தில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் கூறப்பட்டுள்ள தீர்ப்புரையில் தெரிவித்துள்ளதாகவும், இதனை இவ்வழக்கில் தனது தரப்பிற்கு ஆதரவாக கருத வேண்டும் என வாதிட்டு கீழ்கண்ட மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்புகளை தாக்கல் செய்தார்-

| வரிசை எண். | மேற்கோள் தீர்ப்பின் பெயர், விவரம் | எதற்காக இந்த தீர்ப்பை எடுத்துக்காட்டுகிறார் என்ற விவரம் |
|---|---|---|
| ***1.*** | ***Geeta Vs. State of Karnataka (2025 INSC 1089)*** | ***Para-23***<br>23. Applying the tests laid down herein above, we are not able to persuade ourselves to hold that when the appellant's family and the victim's family had heated exchanges, there was any intention to abet or to cause any member of either family to take their own life. These quarrels occur in everyday life, and on facts we are not able to conclude that there was an instigation on the part of the appellant to such an extent that the victim was left with no other option but to commit suicide. |
| ***2.*** | ***Mahendra Awase Vs. State of Mathyapradesh (2025 INSC 76)*** | ***Para-20***<br>20. This Court has, over the last several decades, repeatedly reiterated the higher threshold, mandated by law for Section 306 IPC [Now Section 108 read with Section 45 of the Bharatiya Nyaya Sanhita, 2023] to be attracted. They however seem to have followed more in the breach. Section 306 IPC appears to be casually and too readily resorted to by the police. While the persons involved in genuine cases where the threshold is met should not be spared, the provision should not be deployed against individuals, only to assuage the immediate feelings of the distraught family of the deceased. The conduct of the proposed accused and the deceased, their interactions and conversations preceding the unfortunate death of the deceased should be approached from a practical point of view and not divorced from day-to-day realities of life. Hyper boles employed in exchanges should not, without anything more, be glorified as an instigation to commit suicide. It is time the investigating agencies are sensitized to the law laid down by this Court under Section 306 so that persons are not subjected to the abuse of process of a totally untenable prosecution. The trial courts also should exercise great caution |

| | | |
|---|---|---|
| | | and circumspection and should not adopt a play it safe syndrome by mechanically framing charges, even if the investigating agencies in a given case have shown utter disregard for the ingredients of Section 306. |

**11.** <u>தீர்வுக்குரிய பிரச்சினை-</u>

இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 498-A மற்றும் 306-ன்கீழான அரசு தரப்பு குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

**12.** <u>தீர்வும் அதற்கான விளக்கங்களும், காரணங்களும்-</u>

இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இந்த வழக்கில் இறந்துபோன அபிராமி தற்கொலை செய்துகொண்டு இறந்துள்ளாரா அவ்வாறு இருந்தால் அதற்கு இறந்துபோன அபிராமியின் கணவரான எதிரி வினோத், வரதட்சணை கேட்டு அபிராமியை கொடுமைபடுத்தியதுதான் காரணமா மேலும் அவ்வாறு எதிரி வினோத் இறந்த அபிராமியை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் கொடுமைப்படுத்தி, அத்தகைய கொடுமையின் காரணமாக அபிராமி தற்கொலை செய்துகொண்டாரா என்பதை அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்படி சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபித்துள்ளதா என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை குறித்து தீர்வு செய்வதற்காக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்களை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கிறது.

**13.** <u>இதச பிரிவுகள் **498A** மற்றும் **306** ஆகிய குற்றச்சாட்டுகள் சம்மந்தமான விவாதம்-</u>

<u>இதச பிரிவு **498A-**</u>

(i) இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 498-A ஒரு பெண்ணின் கணவன் அல்லது அப்பெண்ணை கொடுமைக்கு உட்படுத்தும் கணவரின் உறவினருக்கான தண்டனைப் பற்றி கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது-

*498 IPC.*
*498A. Husband or relative of husband of a woman subjecting her to cruelty.—Whoever, being the husband or the relative of the husband of a woman, subjects such woman to cruelty shall be punished with imprisonment for a term which may extend to three years and shall also be liable to fine.*

**14.** இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498A-இன் அர்த்தத்தில் 'கொடுமை' என்ற சொல், அப்பிரிவின் விளக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சட்டப்பிரிவு (a) மற்றும் (b) என இரண்டு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. 'கொடுமை' (Cruelty) என்பது, இப்பிரிவுடனேயே இணைக்கப்பட்டுள்ள விளக்கத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498A-வின் அடிப்படைக்கூறுகள், 'கொடுமை' மற்றும் 'துன்புறுத்தல்' ஆகியவையே ஆகும்.

விளக்கம். - இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 'கொடுமை' என்பது பின்வருவனவற்றைக் குறிக்கும் -

(a). ஒரு பெண்ணைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டும் வகையிலோ, அல்லது அப்பெண்ணின் உயிருக்கோ, உடலுறுப்புகளுக்கோ அல்லது உடல்நலத்திற்கோ (அது மனரீதியானதாகவோ அல்லது உடல்ரீதியானதாகவோ இருக்கலாம்) கடுமையான காயம் அல்லது ஆபத்தை விளைவிக்கும் வகையிலோ செய்யப்படும் எந்தவொரு வேண்டுமென்றே செய்யப்படும் நடத்தையும்;

(b). ஒரு பெண்ணை துன்புறுத்துதல்; அத்தகைய துன்புறுத்தல் என்பது, ஏதேனும் ஒரு சொத்து அல்லது மதிப்புள்ள பிணையம் (valuable security) தொடர்பான சட்டவிரோத

கோரிக்கை எதனையேனும் நிறைவேற்றுமாறு அப்பெண்ணையோ அல்லது அவருடன் தொடர்புடைய வேறு எவரையேனும் வற்புறுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்டதாக இருக்கலாம்; அல்லது அத்தகைய கோரிக்கையை நிறைவேற்றுவதில் அப்பெண்ணோ அல்லது அவருடன் தொடர்புடைய வேறு எவரோ தவறியதன் காரணமாக செய்யப்பட்டதாக இருக்கலாம்.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498A-இன் கீழான குற்றத்தை அறிவதற்கு, மனைவிக்கு இழைக்கப்பட்ட கொடுமை அல்லது துன்புறுத்தல் அல்லது மனைவி தனக்குத்தானே கடுமையான உடல் காயத்தை ஏற்படுத்திக்கொள்ளவோ அல்லது தற்கொலை செய்துகொள்ளவோ கட்டாயப்படுத்துவதான செயல் அல்லது வரதட்சணை போன்ற சட்டவிரோத கோரிக்கைகளை நிறைவேற்றும்படி அப்பெண்ணை வற்புறுத்தும் செயல் என்பது நிரூபிக்கப்பட வேண்டும். எனவே, எல்லா வகையான துன்புறுத்தல் அல்லது கொடுமைகளும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498A-இன் கீழ் வராது.

**15.** பிரிவு 498A-இன் கீழ் வரும் ஒரு குற்றமானது பின்வரும் இன்றியமையாத கூறுகளைக் கொண்டுள்ளது:-

(a) பாதிக்கப்பட்டவர் ஒரு திருமணமான பெண் (அவர் ஒரு விதவையாகவும் இருக்கலாம்);

(b) அவர் தனது கணவராலோ அல்லது கணவரின் உறவினர்களாலோ கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்க வேண்டும்;

(c) அத்தகைய கொடுமையானது பின்வருவனவற்றில் ஒன்றை உள்ளடக்கியதாக அமைந்திருக்க வேண்டும்:

(1) வரதட்சணை கோரிக்கையை நிறைவேற்றுமாறு அப்பெண்ணை வற்புறுத்தும் நோக்கத்துடன் அவருக்கு அளிக்கப்படும் துன்புறுத்தல்; அல்லது

(2) அப்பெண்ணைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டும் வகையிலோ, அல்லது அவரது உயிருக்கோ, உடல் உறுப்புகளுக்கோ அல்லது உடல்நலத்திற்கோ கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலோ, கணவனாலோ அல்லது கணவரின் உறவினராலோ

வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் செயல்;

(d) மேலே குறிப்பிடப்பட்ட அத்தகைய பாதிப்பானது மனரீதியானதாகவோ அல்லது உடல்ரீதியானதாகவோ இருக்கலாம்.

**16.** இந்த இதச சட்டப்பிரிவு 498A-ன்கீழான குற்ற வழக்கை தீர்வு செய்யும்பொழுது கருத்தில்கொள்ள வேண்டிய நடைமுறைகளைப் பற்றி மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கீழே கண்ட தீர்ப்புரைகளில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை இந்த சமயத்தில் எடுத்துரைக்க வேண்டியது அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது-

**A).** Mohd. Hoshan Vs. State of A.P (2002) 7 SCC 414, என்ற வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது:-

> *" Whether one spouse has been guilty of cruelty to the other is essentially a question of fact. The impart of complaints, accusations or taunts on a person amounting to cruelty depends on various factors like the sensitivity of the individual victim concerned, the social background, the environment, education etc. Further, mental cruelty varies from person to person depending on the intensity of sensitivity and the degree of courage or endurance to withstand such mental cruelty. In other words, each case has to be decided on its own facts to decide whether the mental cruelty was established or not."*

**B).** Smt. Raj Rani எதிர் State (Delhi Administration) (AIR 2000 SC 3559) என்ற வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது:-

> *" while considering the case of cruelty in the context to the provisions of Section 498A IPC, the Court must examine that allegations/accusations must be of a very grave nature and should be proved beyond reasonable doubt."*

**C.** Sushil Kumar Sharma vs. Union of India : AIR 2005 SC 3100 வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம், இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC) பிரிவுகள் 306

மற்றும் 498A ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 'கொடுமை' (cruelty) என்பதற்கான வேறுபாட்டை விளக்கும்போது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:-

> *" under Section 498A cruelty committed by the husband or his relation drive woman to commit suicide etc. while under Section 306 IPC, suicide is abated and intended. Therefore, there is a basic difference of the intention in application of the said provisions."*

**D).** Giridhar Shankar Tawade vs. State of Maharashtra AIR 2002 SC 2078 வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:-

> *" cruelty has to be understood having a specific statutory meaning provided in Section 498A IPC and there should be a case of continuous state of affairs of torture by one to another."*

**17.** மேலே எடுத்துரைக்கப்பட்டுள்ள மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளில் வகுத்துள்ள மேற்கூறிய நிலைபெற்ற சட்டக் கோட்பாடுகளிலிருந்து, பின்வரும் விபரங்கள் தெளிவாகிறது:-

- இதச பிரிவு 498A-இன் நோக்கத்திற்காக வரையறுக்கப்படும் 'கொடுமை' என்பது, பிற சட்டப் பிரிவுகளிலிருந்து மாறுபடக்கூடும் என்பதால், பிரிவு 498A-இன் சூழலிலேயே அது தீர்மானிக்கப்பட வேண்டும்.
- ஒரு ஆணின் நடத்தையைக் கருத்தில் கொண்டும், அவனது செயல்களின் தீவிரத்தன்மை அல்லது கடுமையை எடைபோட்டும், அச்செயல்கள் அப்பெண்ணைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டும் வகையிலானவையா என்பதை ஆராய்ந்தும் இக்கொடுமை தீர்மானிக்கப்பட வேண்டும் அல்லது ஊகிக்கப்பட வேண்டும்.
- அப்பெண் தொடர்ந்து அல்லது விடாப்பிடியாகக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார் என்பதோ, அல்லது குறைந்தபட்சம் புகார் அளிக்கப்பட்ட

நேரத்திற்கு மிக நெருங்கிய கால இடைவெளியிலாவது கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார் என்பதோ தீர்மானிக்கப்பட வேண்டும்.

- இதச பிரிவு 498A-இன் சட்டப் பிரிவுகளை ஈர்க்கும் வகையில், அற்பமான சச்சரவுகளை 'கொடுமை' என்று வரையறுக்க இயலாது.
- "தாங்கிக்கொள்ள இயலாத அளவிற்கு மனவேதனையை ஏற்படுத்துவதை 'கொடுமை' என்று குறிப்பிடலாம்."
- இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498A-இன் கீழ் 'கொடுமை' என்பது வரையறுக்கப்பட வேண்டுமாயின், குற்றம் சாட்டப்பட்ட நபரால் அவரது மனைவிக்குத் தொடர்ந்து மனரீதியான அல்லது உடல்ரீதியான சித்திரவதை இழைக்கப்பட்டு வந்திருக்க வேண்டும்.
- இத்தகைய குற்றச்சாட்டுகள் மிகவும் தீவிரமான தன்மையைக் கொண்டவையாக இருக்க வேண்டும்; மேலும், அவை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும்.
- 'கொடுமை' எனும் சொல்லான, இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498A-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட சட்டரீதியான பொருளைக் கொண்டே புரிந்துகொள்ளப்பட வேண்டும்; அத்துடன், ஒரு நபரால் மற்றொருவருக்குத் தொடர்ந்து சித்திரவதை இழைக்கப்படும் ஒரு சூழல் அங்கே நிலவியிருக்க வேண்டும்.
- இந்திய தண்டனை சட்டம் பிரிவு 498(A)-ன்படியான குற்றத்தை நிரூபிப்பதற்கு அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பாதிக்கப்பட்ட நபரை உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ அல்லது வரதட்சணை கோரிக்கைகள் தொடர்பாகவோ கொடுமைப்படுத்துவது தொடர்பான ஆதாரங்களை முன்னிலைபடுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவரின் சாட்சியம் அல்லது நேரில் கண்ட சாட்சிகள், மருத்துவ பதிவுகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதன் மூலம் அரசு தரப்பில் இந்த குற்றச்சாட்டை நிரூபிக்க இயலும்.
- குடும்ப வன்முறையை தடுக்க இந்த சட்டப்பிரிவு இயற்றப்பட்டு இருந்தாலும்

நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி இப்பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த விவரங்களை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிற்கு அதிகமாக உள்ளது.

- நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு நீதிமன்றங்களும் காவல்துறையும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதும், நிரபராதிகளை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளில் இருந்து பாதுகாப்பதும் நீதிமன்றம் மற்றும் காவல்துறையின் கடமை என மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் பல்வேறு முன்தீர்ப்பு முடிவுகளில் கூறப்பட்டுள்ளது.

**18.** இந்த வழக்கினை பொருத்த வரையில் இறந்துபோன அபிராமி என்பவரின் இறப்பு, தூக்கில் தொங்கியதால் ஏற்பட்ட மூச்சுத் திணறலின் காரணமாக நிகழ்ந்திருக்க கூடும் என அ.சா-6 டாக்டர் அமிதா, அபிராமி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த பிறகு சான்று அளித்துள்ளார். அவர் அளித்துள்ள பிரேத பரிசோதனை அறிக்கை, Autopsy Report, Hyoid Bone Report ஆகியவை அ.த.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சாட்சிய, சான்றாவணங்களின்படி இறந்துபோன அபிராமி தூக்கில் தொங்கியதால் ஏற்பட்ட மூச்சுத் திணறலின் காரணமாக இறந்துள்ளார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

**19.** **<u>இதச பிரிவு 306-</u>**

இந்த வழக்கில் எதிரி மீது இதச பிரிவு 306-ன்படியும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

(i) இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 107 குற்ற உடந்தை என்பதை கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது-

குற்ற உடந்தை ***- (OF ABETMENT)***

*107. Abetment of a thing.—A person abets the doing of a thing, who—*
*First.—Instigates any person to do that thing; or*

*Secondly.—Engages with one or more other person or persons in any conspiracy for the doing of that thing, if an act or illegal omission takes place in pursuance of that conspiracy, and in order to the doing of that thing; or*

*Thirdly.—Intentionally aids, by any act or illegal omission, the doing of that thing.*

ii) இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 306 தற்கொலை செய்துகொள்வதற்கு குற்ற உடந்தையாக செயல்படும் நபருக்கான தண்டனைப் பற்றி கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது-

*306 of IPC*
*306. Abetment of suicide.—If any person commits suicide, whoever abets the commission of such suicide, shall be punished with imprisonment of either description for a term which may extend to ten years, and shall also be liable to fine.*

**20.** இந்த இதச சட்டப்பிரிவு 306-ன்கீழான குற்ற வழக்கை தீர்வு செய்யும்பொழுது கருத்தில்கொள்ள வேண்டிய நடைமுறைகளைப் பற்றி மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கீழே கண்ட தீர்ப்புரைகளில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை இந்த சமயத்தில் எடுத்துரைக்க வேண்டியது அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது-

**I). Randhir Singh & Anr. Vs State of Punjab 2004(3) Apex Criminal 683 : 2004(13) SCC 129** என்ற வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:-

*" more active role which can be described as instigating or aiding the doing of a thing is required before a person can be said to be abetting the commission of offence U/Sec.306 IPC."*

**II). State of West Bengal Vs. Orilal Jaiswal, 1994(1) SCC 73** என்ற வழக்கில்,

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:-

> *" the courts should be extremely careful in assessing the facts and circumstances of each case and the evidence adduced in the trial for the purpose of finding whether the cruelty meted out to the victim had in fact induced her to end the life by committing suicide. If it transpires to the court that a victim committing suicide was hypersensitive to ordinary petulance, discord and differences in domestic life quite common to the society to which the victim belonged and such petulance, discord and differences were not expected to induce a similarly circumstanced individual in a given society to commit suicide, the conscience of the court should not be satisfied for basing a finding that the accused charged of abetting the offence of suicide should be found guilty. In our opinion the view taken by the High Court is correct. It often happens that there are disputes and discords in the matrimonial home and a wife is often harassed by the husband or her in-laws. This, however, in our opinion would not by itself and without something more attract Section 306 IPC read with Section 107 IPC. However, in our opinion mere harassment of wife by husband due to differences per se does not attract Sec.306 read with Sec.107 IPC, if the wife commits suicide".*

**III).** மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 12.10.2023 தேதியில் Kamalakar Vs. State of Karnataka (2023 INSC 989) என்ற வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது-

> 8. Applicability of 306 IPC.
>
> 8.1.Section 306 deals with abetment of suicide wherein whoever abets the commission of suicide of another person, he/she shall be punished with imprisonment of either description for a term not exceeding ten years and shall also be liable to fine. This provision has to be read with Section 107 IPC which reads as:
>
> > "107. Abetment of a thing.—A person abets the doing of a thing, who— First.—Instigates any person to do that thing; or Secondly.—Engages with one or more other person or persons in any conspiracy for the
> >
> > doing of that thing, if an act or illegal omission takes place in pursuance of that conspiracy, and in order to the doing of that thing; or Thirdly.— Intentionally aids, by any act or illegal omission, the doing of that thing. Explanation 1.—A person who, by willful misrepresentation, or by wilful concealment of a material fact which he is bound to disclose, voluntarily causes or procures, or attempts to cause or procure, a thing to be done, is said to instigate the doing of that thing. Explanation 2.—Whoever, either prior to or at the time of the commission of an act, does anything in order to facilitate the commission of that act, and thereby facilitates the commission thereof, is said to aid the doing of that act."

8.2. Section 306 IPC penalizes abetment of commission of suicide. To charge someone under this Section, the prosecution must prove that the accused played a role in the suicide. Specifically, the accused's actions must align with one of the three criteria detailed in Section 107 IPC. This means the accused either encouraged theindividual to take their life, conspired with others to ensure the person committed suicide, or acted in a way (or failed to act) which directly resulted in the person's suicide.

8.3. In Ramesh Kumar V. State of Chhattisgarh1, this Court has analysed different meanings of "instigation". The relevant para of the said judgement is reproduced herein:

"20. Instigation is to goad, urge forward, provoke, incite or encourage to do "an act". To satisfy the requirement of instigation though it is not necessary that actual words must be used to that effect or what constitutes instigation must necessarily and specifically be suggestive of the consequence. Yet a reasonable certainty to incite the consequence must be capable of being spelt out. The present one is not a case where the accused had by his acts or omission or by a continued course of conduct created such circumstances that the deceased was left with no other option except to commit suicide in which case (2001) 9 SCC 618 an instigation may have been inferred. A word uttered in the fit of anger or emotion without intending the consequences to actually follow cannot be said to be instigation."

8.4. The essentials of Section 306 IPC were elucidated by this Court in M. Mohan v. State2, as under:

"43. This Court in Chitresh Kumar Chopra v. State (Govt. of NCT of Delhi) [(2009) 16 SCC 605 : (2010) 3 SCC (Cri) 367] had an occasion to deal with this aspect of abetment. The Court dealt with the dictionary meaning of the word "instigation" and "goading". The Court opined that there should be intention to provoke, incite or encourage the doing of an act by the latter. Each person's suicidability pattern is different from the others. Each person has his own idea of self-esteem and self-respect. Therefore, it is impossible to lay down any straitjacket formula in dealing with such cases. Each case has to be decided on the basis of its own facts and circumstances.

44. Abetment involves a mental process of instigating a person or intentionally aiding a person in doing of a thing. Without a positive act on the part of the accused to instigate or aid in committing suicide, conviction cannot be sustained.

45. The intention of the legislature and the ratio of the cases decided by this Court are clear that in order to convict a person under Section 306 IPC there has to be a clear mens rea to commit the offence. It also requires an active act or direct act which led the deceased to commit suicide seeing no option and this act must have been intended to push the deceased into such a position that he/she committed suicide."

8.5. The essential ingredients which are to be meted out in order to bring a case under Section 306 IPC were also discussed in Amalendu Pal alias Jhantu v. State of West

Bengal3 in the following paragraphs:

> (2010) 1 SCC 707 "12. Thus, this Court has consistently taken the view that before holding an accused guilty of an offence under Section 306 IPC, the court must scrupulously examine the facts and circumstances of the case and also assess the evidence adduced before it in order to find out whether the cruelty and harassment meted out to the victim had left the victim with no other alternative but to put an end to her life.
>
> It is also to be borne in mind that in cases of alleged abetment of suicide there must be proof of direct or indirect acts of incitement to the commission of suicide. Merely on the allegation of harassment without there being any positive action proximate to the time of occurrence on the part of the accused which led or compelled the person to commit suicide, conviction in terms of Section 306 IPC is not sustainable.
>
> 13. In order to bring a case within the purview of Section 306IPC there must be a case of suicide and in the commission of the said offence, the person who is said to have abetted the commission of suicide must have played an active role by an act of instigation or by doing certain act to facilitate the commission of suicide. Therefore, the act of abetment by the person charged with the said offence must be proved and established by the prosecution before he could be convicted under Section 306 IPC."

8.6. On a careful reading of the factual matrix of the instant case and the law regarding Section 306 IPC, there seems to be no proximate link between the marital discord between the deceased and the appellant and her subsequent death by burning herself. The appellant has not committed any positive or direct act to instigate or aid in the commission of suicide by the deceased.

**IV).** 30.01.2024 அன்று தீர்ப்பளிக்கப்பட்ட, **Prabhu vs The State Rep By The Inspector Of Police on 30 January, 2024** என்ற அண்மைத் தீர்ப்பில், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 306-இன் கூறுகள் தொடர்பான கோட்பாடுகள் பின்வருமாறு தொகுத்துரைக்கப்பட்டுள்ளன:-

> *10. On a perusal of the above, and relying upon this Court's previous judgments discussing the elements of Section 306 IPC, the following principles emerge:10.1 Where the words uttered are casual in nature and which are often employed in the heat of the moment between quarreling people, and nothing serious is expected to follow from the same, the same would not amount to abetment of suicide. [Swami Prahaladdas v. State of M.P 1995 Supp. (3) SCC 438, Paragraph 3; Sanju v. State of M.P (2002) 5 SCC 371, Paragraph 12]*
>
> *10.2 In order to constitute 'instigation', it must be shown that the accused had, by his acts*

*or omission or by a continued course of conduct, created such circumstances that the deceased was left with no other option except to commit suicide. The words uttered by the accused must be suggestive of the consequence [Ramesh Kumar v. State of Chhatisgarh (2001) 9 SCC 618, Paragraph 20]*

*10.3 Different individuals in the same situation react and behave differently because of the personal meaning they add to each event, thus accounting for individual vulnerability to suicide. [Chitresh Kumar Chopra v. State (Government of NCT of Delhi) (2009) 16 SCC 605, Paragraph 20]*

*10.4 There must be direct or indirect acts of incitement to the commission of suicide. The accused must be shown to have played an active role by an act of instigation or by doing certain act to facilitate the commission of suicide [Amalendu Pal v. State of West Bengal (2010) 1 SCC 707, Paragraph 12-4]*

*10.5 The accused must have intended or known that the deceased would commit suicide because of his actions or omissions [Madan Mohan Singh v. State of Gujarat (2010) 8 SCC 628]*

**V) Prakash and others Vs. State of Maharashtra and another, 2024 INSC 1020** என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பு முடிவில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் இதச பிரிவு 306-ன்கீழான குற்றம் குறித்து பின்வருமாறு விளக்கியுள்ளது:-

*" 13. Section 306 of the IPC has two basic ingredients-first, an act of suicide by one person and second, the abetment to the said act by another person(s). In order to sustain a charge under section 306 of the IPC, it must necessarily be proved that the accused person has contributed to the suicide by the deceased by some direct or indirect act. To prove such contribution or involvement, one of the three conditions outlined in Section 107 of the IPC has to be satisfied".'*

*"14. Section 306 read with Section 107 of IPC, has been interpreted, time and again, and its principles are well – established. To attract the offence of abetment to suicide, it is important to establish proof of direct or indirect acts of instigation or incitement of suicide by the accused, which must be in close proximity to the commission of suicide by the deceased. Such instigation or incitement should reveal a clear mens rea to abet the commission of suicide and should put the victim in such a position that he/she would have no other option but to commit suicide."*

**21.** எனவே, இத்தகைய மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பு முடிவுகளின்

வழிகாட்டுதல்களின்படி, இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 306-இன் கீழ் ஒரு குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி எனத் தீர்ப்பளிப்பதற்கு முன்னர், நீதிமன்றமானது அவ்வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை மிகக் கவனமாக ஆராய வேண்டும் என்றும்; பாதிக்கப்பட்டவர் மீது இழைக்கப்பட்ட கொடுமை மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக, அவர் தனது உயிரை மாய்த்துக்கொள்வதைத் தவிர வேறு மாற்று வழியே இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டாரா என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களையும் முழுமையாக மதிப்பிட வேண்டும் என்றும், மேலும், தற்கொலைக்குத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்படும் வழக்குகளில், தற்கொலை செய்துகொள்ளுமாறு தூண்டியதற்கான நேரடியான அல்லது மறைமுகமான செயல்கள் நிகழ்ந்தன என்பதற்குரிய ஆதாரம் கட்டாயம் இருக்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுதல் அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**22.** வெறும் துன்புறுத்தல் குற்றச்சாட்டை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, சம்பவம் நிகழ்ந்த நேரத்திற்கு மிக நெருக்கமாக, பாதிக்கப்பட்டவரைத் தற்கொலை செய்துகொள்ளுமாறு வழிநடத்திய அல்லது கட்டாயப்படுத்திய வகையிலான எந்தவொரு உறுதியான செயலும் குற்றம் சாட்டப்பட்டவரின் தரப்பில் நிகழாதபட்சத்தில், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 306-இன் கீழ் வழங்கப்படும் குற்றத்தீர்ப்பானது சட்டரீதியாக நிலைநிறுத்தத்தக்கதல்ல என்று மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**23.** ஒரு வழக்கை இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 306-இன் வரம்பிற்குள்

கொண்டுவர வேண்டுமெனில், அங்கு ஒரு தற்கொலை நிகழ்ந்திருக்க வேண்டும்; மேலும், அக்குற்றத்தைச் செய்வதில், தற்கொலைக்குத் தூண்டியதாகக் கூறப்படும் நபர், தூண்டுதல் மூலமாகவோ அல்லது தற்கொலை நிகழ்வதை எளிதாக்கும் வகையிலான ஏதேனும் ஒரு செயலைச் செய்வதன் மூலமாகவோ ஒரு தீவிரமான பங்கை ஆற்றியிருக்க வேண்டும். எனவே, அக்குற்றம் சாட்டப்பட்ட நபரை இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 306-இன் கீழ் குற்றவாளியாகத் தீர்ப்பளிப்பதற்கு முன்னதாக, அந்நபர் செய்ததாகக் கூறப்படும் 'தூண்டுதல் செயல்' (abetment) என்பதை அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்திருக்க வேண்டும்.

**24.** மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பு முடிவுகளில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல் சட்டகோட்பாடுகளின் அடிப்படையில் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 498 ஏ மற்றும் 306-ன்கீழான குற்றச்சாட்டுகள் சம்மந்தமான அரசு தரப்பு சாட்சியங்களை குறித்து ஆராயும்போது கீழ்கண்ட விபரங்கள் தெரிய வருகிறது.

**25.** இவ்வழக்கின் இறுதி அறிக்கையிலேயே இறந்துபோன அபிராமி என்பவர்தான் தன்னுடைய அத்தை மகளின் திருமணத்தின்போது செய்யப்பட்ட சீர்வரிசையை பார்த்து தன்னுடைய பெற்றோரிடம் தனக்கு ஏன் சீர்வரிசை செய்யவில்லை என்று கேட்டதாகவும், அப்போது அபிராமியின் தகப்பனார் முருகதாஸ்/அ.சா-1 அடுத்த வருடம் சீர்வரிசை செய்வதாக கூறினார் என்றும் அதை தன் கணவரான எதிரி வினோத்குமாரிடம் அபிராமி சொன்னபோது எதிரி வினோத் "நம்மை மதிக்காதவர்களிடம் சென்று ஏன் சீர்வரிசை பற்றி பேசினாய்" என கேட்டு வாய் தகராறு செய்து, அபிராமியை கையால்

தாக்கி உடல்ரீதியாக துன்புறுத்தி, செத்துப்போடி நான் வேறு திருமணம் செய்துகொள்கிறேன் என்று கூறியதால் மனஉளைச்சலுக்கு ஆளான அபிராமி எதிரி வினோத்தின் இட்லி கடையின் உள்ளே தூக்குப்போட்டு இறந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா-1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள அபிராமியின் தகப்பனார் முருகதாஸ் "எதிரி வீட்டில் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதனால் என் மகள் தூக்குபோட்டு இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் மகளும் எதிரியும் திருமணம் செய்துகொண்ட சமயத்திலிருந்து அவர் இறந்தவரை நான் அவருடன் பேசுவதில்லை." என்று சாட்சியளித்துள்ளார். மேலும், தன் மகள் இறப்பில் சந்தேகம் இருந்ததால் சாலை மறியல் செய்ததாகவும், பின்னர் மாவட்ட ஆட்சியரிடம் சென்று மனு கொடுத்ததாகவும், அந்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியளித்துள்ளார். அரசு தரப்பில் இது குறித்து விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**26.** அ.சா-2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள அபிராமியின் தாயார் சத்தியகுமாரி எதிரியின் அம்மா, அப்பா தன்னிடம் வந்து தன் மகளுக்கு எதுவும் செய்யவில்லை என்று வம்பு வளர்த்தார்கள், அந்த சண்டை பெரிதாக நடந்ததால் சிதம்பரம் நகர் காவல் நிலையத்தில் எதிரியின் அம்மா, அப்பா, எதிரி மீது புகார் கொடுத்ததாக சாட்சியளித்துள்ளார். அ.சா-3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள அபிராமியின் சகோதரர் முரளிதரனும் மறுநாள் சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் இவரும் இவரது அப்பா, அம்மா மூன்று பேரும் புகார் கொடுத்தனர். அதன்பிறகு இவரது தங்கை வந்து காவல்நிலையத்தில் தான் இஷ்டப்பட்டு தான் திருமணம் செய்துகொண்டதாகவும்

அப்பா, அம்மா வேண்டாம் என்று எழுதிகொடுத்துவிட்டார்கள் என்று சாட்சியளித்துள்ளார். ஆனால் அ.சா-1 மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்ததாகவோ, அ.சா-2 சத்தியகுமாரி வினோத்குமார் மீதும் அவரது குடும்பத்தார் மீதும் வேறு எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றும் அ.சா-8 காவல் ஆய்வாளர் முருகேசன் சாட்சியளித்துள்ளார்.

**27.** அ.சா-7 சிதம்பரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திருமணத்தின்போது சண்டை வந்தது குறித்து எதிரி மீதோ அவரது பெற்றோர்கள் மீதோ தான் விசாரணை செய்தவரையில் புகார் உள்ளது குறித்து ஞாபகமில்லை என சாட்சியளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா-5 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சிதம்பரம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் ஆட்சியராக இருந்த விஷு மகாஜன் தன்னுடைய சாட்சியத்தில் சாட்சிகளை விசாரித்ததில் "என்னுடைய subjective assessment finding-ன்படி நான் வரதட்சணை கொடுமை காரணமல்ல என்ற என்னுடைய முடிவை குறிப்பிட்டுள்ளேன். DSP என்னை விசாரிக்கவில்லை" என்று சாட்சியளித்துள்ளார். அ.த.சா.ஆ-5 ஆக குறியிடப்பட்டுள்ள சிதம்பரம் உட்கோட்ட நடுவர் வழங்கியுள்ள அறிக்கையில் அவருடைய இறுதி கருத்தாக கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது-

> கருத்து:
>
> அபிராமியின் இறப்பு தொடர்பாக அவரது தாய், தந்தை, சகோதரன், கணவர், மாமனார், மாமியார், நாத்தனார் மற்றும் பஞ்சாயத்தார் ஆகியோரிடம் விசாரணை செய்து வாக்குமூலங்கள் பெறப்பட்டன. மேற்படி வாக்குமூலங்களைப் பரிசீலனை செய்ததில், அபிராமி - வினோத்குமார் ஆகிய இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்பதும், அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளனர் என்பதும் தெரியவருகிறது. மேற்படி திருமணத்தை அபிராமியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்த்துள்ளனர். இதனால் ஏற்பட்ட பிரச்சினையில், அபிராமியின் கழுத்தில் இருந்த தாலியை அபிராமியின் தாயாரான திருமதி.சத்தியகுமாரி என்பவர் பிடித்து

இழுத்துள்ளார். இதன் காரணமாக இரு குடும்பத்தாருக்குமிடையே பிரச்சினை இருந்து வந்துள்ளது. மேற்படி திருமணத்தின்போது மாப்பிள்ளை வீட்டார் பணம், நகை ஏதும் கேட்கவில்லை என்பது தெரிய வருகிறது. இந்நிலையில் அபிராமியின் மாமியாரான திருமதி.சுமதி என்பவர் நடத்தி வந்த இட்லி கடையில் தனது மாமியாருக்கு உதவியாக அபிராமி எல்லா வேலைகளையும் செய்து வந்துள்ளார். இந்நிலையில் திருமணமான ஒரு வருடத்திற்குப்பிறகு அபிராமி தனது தாயை சந்தித்து தனக்கும் தனது குழந்தைக்கும் ஏதாவது செய்யும்படி கோரியுள்ளார். பிறகு சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அபிராமியும், வினோத்குமாரும் ஒரு திருமணத்திற்கு சென்று வந்துள்ளனர். மேற்படி திருமணத்தில் செய்யப்பட்ட சீர்வரிசை பொருட்களை பார்த்து தனக்கும் தனது தாய் வீட்டிலிருந்து இவ்வாறு செய்யவில்லையே என்ற மன உளைச்சலில் அபிராமி இருந்துள்ளார் என தெரிய வருகிறது. இந்நிலையில் 03.11.2019 அன்று அபிராமி இறந்துள்ளார்.

எனவே, விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் எனது பிரேதப்பார்வையின் அடிப்படையிலும் அபிராமியின் இறப்பில் வரதட்சணை கொடுமை நிகழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோன். மேலும் இந்நேர்வில், இறந்தவரின் மரணத்திற்கு வேறு காரணம் ஏதேனும் உள்ளதா என்பதை ஆராய பிரேதபரிசோதனை அறிக்கையினைப் பெற்று அதனடிப்படையில் காவல்துறையினர் புலன் விசாரணை செய்து மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சிதம்பரம் உட்கோட்ட நடுவர் அளித்துள்ள இத்தகைய இறுதி கருத்துரையும் மற்றும் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இறந்துபோன அபிராமி தன்னுடைய அத்தை மகளின் திருமணத்திற்கு சென்றபோது மணப்பெண்ணிற்கு மோட்டார் சைக்கிள், சாமான்கள் மற்றும் பவுன்கள் ஆகியவை சீராக செய்யப்பட்டுள்ளதை பார்த்து தனது பெற்றோரிடமும் தனக்கு ஏன் சீர் வரிசை செய்யவில்லை என்று கேட்டதாக குறிப்பிட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**28.** இத்தகைய அ.சா-1 முதல் 3 வரையிலான சாட்சிகள் தெரிவித்திருப்பதையும் சிதம்பரம் உட்கோட்ட நடுவர் மற்றும் சார் ஆட்சியர் அளித்துள்ள அறிக்கையை ஒப்பிட்டு பார்க்கும்போது, இறந்துபோன அபிராமி, எதிரியை காதல் திருமணம் செய்து வாழ்ந்த

நிலையில் அபிராமி இறந்துவிட்டார் என்ற வருத்தம் காரணமாக அரசு தரப்பு விசாரணை சமயத்தில் தெரிவிக்காத விவரங்களையும், தெரிவித்துள்ள விவரங்களை மாற்றியும் கூடுதலாக தெரிவித்து சாட்சியளித்திருப்பதாகவே அறிந்துக்கொள்ள முடிகிறது. மேலும், எதிரி வினோத் தன்னுடைய மனைவி அபிராமியை திருமணம் செய்துகொண்ட செலவு, ரிசப்ஷன், வளைகாப்பு மற்றும் அனைத்து செலவுகளையும் எதிரியும் அவரது குடும்பத்தார்கள்தான் செய்தார்கள் என்று அபிராமியின் அம்மா அ.சா-2, அபிராமியின் சகோதரர் அ.சா-3 ஆகியோர் ஏற்றுக்கொண்டு சாட்சியமளித்துள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே, இத்தகைய வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது அ.சா-1 முதல் 3 வரையிலான அபிராமியின் அப்பா, அம்மா, சகோதரர் ஆகியோரின் சாட்சிகளின் அடிப்படையில் மட்டும் இந்த வழக்கில் எதிரி இறந்துபோன அபிராமியை திருமணம் சம்மந்தமாக கொடுமை செய்தார் என்பதையோ, அல்லது தற்கொலை செய்துகொள்வதை தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு தன்னுடைய மனைவி அபிராமியை எதிரி தள்ளியதாகவோ தீர்மானிக்க இயலாது.

**29.** இறுதியாக, இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களில் நிச்சயமற்ற தன்மையும் மற்றும் இந்த அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள், எதிரி மீதான இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்ற செய்கைகளை உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாக இல்லை என்றும், அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**30.** ***2018(1) MWN (Cr.) 72 (SC)*** என்ற சட்ட இதழில் வெளி வந்துள்ள Khekh Ram.Vs, State of H.P. என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் அளித்துள்ளத் தீர்ப்பில் சந்தேகம் என்பது எவ்வளவு வலிமையானதாக இருந்தாலும் அது நிருபணத்திற்கு சமமாகாது. ஒரு குற்ற வழக்கில் சட்டப்பூர்வமான நிரூபணம் என்பது மிகவும் அவசியமானது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் எத்தகைய தீர்வையும் அளிக்க முடியாது என்றும் குறிப்பிட்டு இந்த தீர்ப்பின் பத்தி-23 ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.-

*Para 23. It is a common place proposition that in a criminal trial suspicion however grave cannot take the place of proof and the prosecution to succeed has to prove its case and establish the charge by adducing convincing evidence to ward off any reasonable doubt about the complicity of the accused. For this, the prosecution case has to be in the category of "must be true" and not "may be true".*

*This Court while dwelling on this postulation, in Rajiv Singh vs. State of Bihar and another dilated thereon as hereunder:*

*"66. It is well entrenched principle of criminal jurisprudence that a charge can be said to be proved only when there is certain and explicit evidence to warrant legal conviction and that no person can be held guilty on pure moral conviction. Howsoever grave the alleged offence may be, otherwise stirring the conscience of any court, suspicion alone cannot take the place of legal proof. The well established cannon of criminal justice is "fouler the crime higher the proof". In unmistakable terms, it is the mandate of law that the prosecution in order to succeed in a criminal trial, has to prove the charge(s) beyond all reasonable doubt.*

*67. The above enunciations resonated umpteen times to be reiterated in Raj Kumar Singh v. State of Rajasthan as succinctly summarized in paragraph 21 as hereunder:*

*21. Suspicion, however grave it may be, cannot take the place of proof, and there is a large difference between something that "may be" proved and "will be proved". In a criminal trial, suspicion no matter how strong, cannot and must not be permitted to take place of proof. This is for the reason that the mental distance between "may be" and "must be" is quite large and divides vague conjectures from sure conclusions. In a criminal case, the court has a duty to ensure that mere conjectures or suspicion do not take the place of legal proof. The large distance between "may be" true and "must be" true, must be covered by way of clear, cogent and unimpeachable evidence produced by the prosecution, before an accused is condemned as a convict, and the basic and golden rule must be applied. In such cases, while keeping in mind the distance between "may be" true and "must be" true, the court must maintain the vital distance between conjectures and sure conclusions to be arrived at, on the touchstone of dispassionate judicial scrutiny based upon a complete and comprehensive appreciation of all features of the case, as well as the quality and 37 credibility of the evidence brought on record. The court must*

*ensure that miscarriage of justice is avoided and if the facts and circumstances of a case so demand, then the benefit of doubt must be given to the accused, keeping in mind that a reasonable doubt is not an imaginary, trivial or a merely probable doubt, but a fair doubt that is based upon reason and common sense.[Emphasis laid by the Court]*

*68. In supplementation, it was held in affirmation of the view taken in Kali Ram v.State of H.P. that if two views are possible on the evidence adduced in the case, one pointing to the guilt of the accused and the other to his innocence, the view which is favourable to the accused should be adopted.*

*69. In terms of this judgment, suspicion, howsoever grave cannot take the place of proof and the prosecution case to succeed has to be in the category of "must be" and not "may be" a distance to be covered by way of clear, cogent and unimpeachable evidence to rule out any possibility of wrongful conviction of the accused and resultant miscarriage of justice. For this, the Court has to essentially undertake an exhaustive and analytical appraisal of the evidence on record and register findings as warranted by the same. The above proposition is so well-established that it does not call for multiple citations to further consolidate the same."*

**31.** இத்தகைய சூழ்நிலையில், ***2023 INSC 758*** என்ற தீர்ப்புரையில் ***Irfan @ Naka Vs. State of Uttar pradesh*** என்ற வழக்கில் 23.08.2023 தேதியில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள முன்தீர்ப்பு முடிவில் பத்தி-65, 66ல் கீழ்க்கண்டவாறு மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீரப்பளித்துள்ளதை எடுத்துரைப்பது அவசியமானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.-

*65. In Sujit Biswas v. State of Assam reported in (2013) 12 SCC 406, this Court, while examining the distinction between "proof beyond reasonable doubt" and "suspicion" in para 13 has held as under:*

*"13. Suspicion, however grave it may be, cannot take the place of proof, and there is a large difference between something that "may be" proved, and something that "will be proved". In a criminal trial, suspicion no matter how strong, cannot and must not be permitted to take place of proof. This is for the reason that the mental distance between "may be" and "must be" is quite large, and divides vague conjectures from sure conclusions. In a criminal case, the court has a duty to ensure that mere conjectures or suspicion do not take the place of legal proof. The large distance between "may be" true and "must be" true, must be covered by way of clear, cogent and unimpeachable evidence produced by the prosecution, before an accused is condemned as a convict, and the basic and golden rule must be applied. In such cases, while keeping in mind the distance between "may be" true and "must be" true, the court must maintain the vital distance between mere conjectures and sure conclusions to be arrived at, on the touchstone of dispassionate judicial scrutiny, based upon a complete and comprehensive appreciation of all features of the case, as well as the quality and credibility of the evidence brought on record. The court must ensure, that miscarriage of justice is avoided, and if the facts and circumstances of a case so demand, then the benefit of doubt must be given to the accused, keeping in mind that a reasonable doubt is not an imaginary, trivial or a merely probable doubt, but a fair doubt that is based*

*upon reason and common sense."*

*66. It may be true as said by this Court, speaking through Justice Krishna Iyer in Dharm Das Wadhwani v. State of Uttar Pradesh reported in (1974) 4 SCC 267, that the rule of benefit of reasonable doubt does not imply a frail willow bending to every whiff of hesitancy. Judges are made of sterner stuff and must take a practical view of the legitimate inferences flowing from the evidence, circumstantial or direct. Even applying this principle, we have a doubt as regards the complicity of the appellant-convict in the crime.*

**32.** இவ்வழக்கில் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலைப்படுத்தி வாதிட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பு முடிவுகளில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல்களும் இவ்வழக்கினை தீர்வு செய்வதற்கு உதவியாக இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள தீர்ப்புரையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில், ஒரு குற்ற வழக்கில் அந்த குற்றத்திற்கான தண்டனை எத்தகைய கடுமையானதாக உள்ளதோ அதற்கு தகுந்தாற்போல், உறுதியான ஆதாரத்தை முன்வைத்து, வழக்கினை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரசு தரப்புக்கு உள்ளது. அத்தகைய சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரத்தை முன் வைத்த பின்னர் தான் அரசு தரப்பு வழக்கினை அரசு தரப்பு நிரூபித்ததாக கருத இயலும். ஆனால், இந்த வழக்கில் அரசு தரப்பு அத்தகைய சாட்சிய சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்பதை அறிந்துக்கொள்ள முடிகிறது.

**33.** இந்த சூழ்நிலைகளில், மேற்கூறிய அனைத்தையும் கருத்தில்கொண்டு, இந்த நீதிமன்றம் அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தைக் காண்கிறது, இவ்வாறான சந்தேகம் எப்பொழுதும் குற்ற வழக்கில் எதிரிக்கு ஆதரவாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரசு தரப்பு சாட்சியங்கள் தெளிவாகவும், சீரற்றதாகவும், உறுதியாகவும் இல்லாததால், இதுபோன்ற முரண்பாடான மற்றும் உறுதிப்படுத்தப்படாத ஆதாரங்களின் அடிப்படையிலும், காவல்துறை அதிகாரிகளின் சாட்சியங்களின் அடிப்படையிலும் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று தீர்ப்பளித்து தண்டிப்பது மிகவும் பாதுகாப்பற்றது. புலனாய்வு காவல்துறை சாட்சிகளின் சாட்சியங்களும் பிற சான்றிதழ்களும் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க எந்த உதவியும் செய்யவில்லை.

**34.** இறுதியாக, மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள வழிக்காட்டுதல் தீர்ப்புரைகளின் அடிப்படையிலும், இந்த வழக்கில் மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, அரசு தரப்பு வழக்கு சாட்சிய, சான்றாவணங்களில் எழுந்துள்ள முரண்பாடுகளை கருத்தில்கொண்டும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவாதங்களைக் கருத்தில்கொண்டும், எதிரியின் கொடுமை மற்றும் துன்புறுத்தல் செய்கை காரணமாக அபிராமி தற்கொலை செய்துகொள்ளும் முடிவை எடுத்துள்ளார் என அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் இதச பிரிவு 498A-ன்படியான எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டும், தற்கொலைக்குத் தூண்டியதாகக் கூறப்படும் எதிரி, தூண்டுதல் மூலமாகவோ அல்லது தற்கொலை நிகழ்வதை எளிதாக்கும் வகையிலான ஏதேனும் ஒரு செயலைச் செய்வதன் மூலமாகவோ ஒரு தீவிரமான பங்கை ஆற்றியதன் மூலம் 'தூண்டுதல் செயல்' (abetment) புரிந்தார் என்ற இதச பிரிவு 306-ன்கீழான எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டும் அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**35.** முடிவாக, குற்றம் சாட்டப்பட்ட எதிரிக்கு எதிரான தனது வழக்கை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க அரசு தரப்பு தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் தீர்வு கண்டு, எதிரி இதச பிரிவுகள் **498-A** மற்றும் **306-**ன்கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு **235(1)-**ன்படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது, இவ்வழக்கில் குவிமுச பிரிவு **437(A)-**ன்படி எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலம் வரை நிலுவையில் இருக்க வேண்டுமெனவும் பின்னர் ரத்து செய்யப்பட வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, **2026** ஆம் ஆண்டு, ஜூலை மாதம் **10-**ஆம் நாள் திறந்த வழக்கரங்கில் என்னால் பகரப்பட்டது.

G KULASEKARAN

Digitally signed by G KULASEKARAN
Date: 2026.07.10 14:26:41 +0530

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.

## ANNEXURE AS PER RULE NO.106 OF THE CRIMINAL RULES OF PRACTICE 2019

| | |
|---|---|
| Name of the police station and the Crime number of the offence | Inspector of Police<br>Chidambaram Town P.S.<br>**(Cr. No. 337 of 2019)** |

| | | |
|---|---|---|
| Description of the accused (Name, Age, Father's Name, Residence) | | Vinothkumar @ Vinoth, Age 32 / 2019<br>S/o. Ravichandiran<br>Kamatchiyamman Koil Sandhu,<br>Mandhakarai,<br>Chidambaram. |
| Date of: | Occurrence | 03.11.2019 |
| | Complaint | 03.11.2019 |
| | Apprehension | *06.11.2019* |
| | Released on bail | *09.12.2019*<br>*(Accused Released on bail as per the order of the Honourable Principal District Judge Cuddalore, in Crl.M.P.No.7535 of 2019, dated: 04.12.2019)* |
| | Commitment | 08.11.2021 |
| | Commencement of Trial | 10.10.2023 |
| | Closure of Trial | 07.04.2026 |
| Sentence or Order | | Accused is acquitted from both the charges. |
| Service of copy of Judgment of finding on accused | | Immediately after the pronouncement of Judgment, the digitally signed copy of the Judgment uploaded in the e-court portal. |
| Explanation of Delay | | No delay |

<u>அரசு தரப்பு சாட்சிகளின் விவரங்கள்-</u>

| அரசு தரப்பு சாட்சி எண். | சாட்சியின் பெயர்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1. | முருகதாஸ் | புகார்தாரர் /இறந்த அபிராமியின் தந்தை. |
| 2. | சத்தியகுமாரி | இறந்த அபிராமியின் தாயார். |
| 3. | முரளிதரன் | இறந்த அபிராமியின் சகோதரர். |
| 4. | டாக்டர்.அமிதா | மருத்துவர். |
| 5. | விஷு மகாஜன் | சிதம்பரம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் |

| | | |
|---|---|---|
| | | ஆட்சியர். |
| 6. | பாலு | பார்வை மகசர் சாட்சி. |
| 7. | ஜவஹர்லால் | காவல் துணை கண்காணிப்பாளர். |
| 8. | முருகேசன் | காவல் ஆய்வாளர்/புலன்விசாரணை அதிகாரி. |

அரசு தரப்பு சான்றாவணங்கள் மற்றும் யார் மூலம் குறியிடப்பட்டது என்ற விவரங்கள் :-

| ஆவண எண். | ஆவணத்தின் விளக்கம் | யாரால் நிரூபிக்கப்பட்டது./ சான்றளிக்கப்பட்டது. |
|---|---|---|
| 1. | புகார். | அ.சா-1 |
| 2. வரிசை | 3 தாள்கள் அடங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் Autopsy Report, Hyoid Bone Report ஆகியவை. | அ.சா-4 |
| 3. | 9 பக்கங்கள் கொண்ட 5 தாள்கள் கொண்ட Report அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 8 தாள்கள் கொண்ட சாட்சியங்களின் வாக்குமூலங்கள் அடங்கிய Report 13 தாள்கள் கொண்ட ஆவணம். | அ.சா-5 |
| 4. | பார்வை மகசரில் உள்ள அ.சா-6 ன் முதலாவது கையொப்பம் மட்டும். | அ.சா-6 |
| 5. | முதல் தகவல் அறிக்கை. | அ.சா-7 |
| 6. | பார்வை மகசர். | அ.சா-7 |
| 7. | மாதிரி வரைபடம். | அ.சா-7 |
| 8. | 03.11.2019 ஆம் தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா-7 |
| 9. | 28.06.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா-8 |
| 10. | பிரேத விசாரணை அறிக்கை. | அ.சா-8 |

நீதிமன்ற சான்றாவணம் மற்றும் யார் மூலம் குறியிடப்பட்டது என்ற விவரம்:- இல்லை.

அரசு தரப்பு பொருள் சான்று மற்றும் யார் மூலம் குறியிடப்பட்டது என்ற விவரம்:- இல்லை.

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், பொருள் சான்று மற்றும் யார் மூலம் குறியிடப்பட்டது என்ற விவரம்:-** இல்லை.

G KULASEKARAN

Digitally signed by G KULASEKARAN
Date: 2026.07.10 14:26:58 +0530

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.

Draft/Fair Judgment
SC.No.218 of 2021
Dated: 10.07.2026